Registered at the G. P. O. as a Newspaper ★ விலை சதம் 15

# ஈழநாடு

தேசிய தினசரி National Tamil Daily

வர் 7 விசுவாவசு வைகாசி 31 ஸபர பிறை 12 (13-6-65) ஞாயிற்றுக்கிழமை இதழ் 122

பாவனைக்குச் சிறந்தது
டொலர் மார்க்
அலுமினியப் பாத்திரங்கள்




டொலர் கோர்ப்பரேஷன்
14-டாம் வீதி, கொழும்பு

## தேசிய அரசாங்கத்துக்கு ஆதரவு சிங்கள திணிப்புக்கு கண்டனம்

### தமிழாசிரியர் சங்க ஆண்டுவிழாவில் தீர்மானம்

குரும்பசிட்டி, சனி

வலிகாமம்-வடக்குத் தமிழாசிரியர்சங்கத்தின் 33வது ஆண்டு நிறைவுவிழா திரு. எஸ் பொன்னுத்துரை தலைமையில் மல்லாகம் அமெரிக்க மிஷன் பாடசாலையில் நடைபெற்றது. காரியதரிசி திரு. ச. அடைக்கலமுத்து தனது வருடாந்த அறிக்கையை சமர்ப்பித்து பேசியதைத் தொடர்ந்து காங்கேசன்துறை எம். பி. திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், வட பிரதேச உதவி வித்தியாதிபதி திரு. எஸ். தணிகாசலம், வட்டார வித்தியாதரிசிகர் திரு. வி. சண்முகநாதன், இலங்கை தமிழாசிரியர் சங்கத் தலைவர் திரு. இ. கந்தையா ஆகியோர் இவ்வாண்டு விழாவில் சொற்பொழிவாற்றினர். நாட்டின் கல்விப்பிரச்னைகளைத் தீர்ப்பதில் தேசிய அரசாங்கத்திற்கு பரிபூரண ஒத்துழைப்பு அளிப்பதெனவும், தமிழாசிரியர்களை சிங்கள மொழியை படிக்குமாறு வற்புறுத்துவதற்கு கண்டனம் தெரிவிப்பது எனவும் இவ்விழாவில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# யாழ்ப்பாண ஆஸ்பத்திரியில் ஏற்பு ஊசி மருந்தில்லை

## நோயாளர் அவதி

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் கடந்த ஒரு வாரமாக ஏற்பு ஊசி மருந்துக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதன் காரணமாக ஏற்புவலியால் பாதிக்கப்பட்டுள்ள நோயாளர்கள் பெரிதும் கஷ்டமடைய வேண்டியிருப்பதாக அறியப்படுகிறது.

ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கும் ஏற்புவலியினால் பாதிக்கப்பட்டுள்ள நோயாளருக்கு குளிகை மருந்து மட்டுமே கொடுக்கப்படுவதாகவும் வெளிநோயாளரிடம் இந்த மருந்து இல்லையெனத் தெரிவிக்கப்பட்டுவெளியில்முடியுமானால் வாங்குமாறுகோரப்படுவதாகவும் அறியப்படுகிறது.

இவ்விதநிலையால் நோயாளர் கஷ்டமுறுகின்றனர்என்பதனைச்சுட்டிக்காட்டி ஏற்புவலித் தடுப்புஊசி மருந்தை விரைவில் அனுப்பிவைக்குமாறு ஆஸ்பத்திரி கமிட்டித் தலைவர் கொழும்பிலுள்ள அரசாங்கமருத்துவசாலைக்கு தந்திச் செய்திமூலம் கேட்டுள்ளதாகத் தெரிகிறது. தற்போது கொழும்பிலும் இந்த மருந்துக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

## ‘ஈழநாடு’ சூறுவளி நிவாரண உதவி

யாழ்ப்பாணம், ஞாயிறு

‘ஈழநாடு’ சூறுவளி நிவாரண உதவிச் சபையாரால் இன்று பின்வரும் இடங்களில் நிவாரண உதவி வழங்கப்படும்.

நாகர்கோவிலில்அரசாங்க பாடசாலையில் பிற்பகல் 3-30 க்கும். குடத்தனையில் கிராமாபிவிருத்திச் சங்க மண்டபத்தில் மாலை 4 மணிக்கும், தும்பளையில் கிராமசேவகர் காரியாலயத்தில் மாலை 4-30 க்கும், பருத்தித்துறையில் கிராம சேவகர் காரியாலயத்தில் மாலை 4-45க்கும், வல்வெட்டித்துறையில் சிதம்பராக் கல்லூரியில் மாலை 5-15க்கும் நிவாரண உதவி வழங்கப்படும்.

## சட்டவிரோதத்தை தடுக்க 2 நவீன இயந்திரப்படகுகள்

குரும்பசிட்டி, சனி

இலங்கை கடற்படையினர் சிங்கப்பூரிலுள்ள தனிப்பட்ட கம்பெனி ஒன்றிடமிருந்து 2 நவீன இயந்திரப் படகுகளை வாங்கவிருக்கின்றனர். வடபகுதி கரையோரங்களில் அதிகரித்துவரும் சட்டவிரோத குடியேற்றக்காரரின் வருகையை தடைசெய்யும் தடுப்புவேலைக்கு இந்த இயந்திரப் படகுகள் பாவிக்கப்படும் என அறியப்படுகிறது. நவீன இயந்திர சாதனங்கள் பொருத்தப்பட்ட இப்படகுகள் ரோந்து சுற்றும் வேலைகளுக்கு உபயோகப்படுத்தப்படும்.

### திருவள்ளுவர் விழா

பம்பலப்பிட்டி, ஞாயிறு

கொழும்பு தமிழ்ச் சங்க ஆதரவில் திருவள்ளுவர் விழா இன்றுமாலை 5மணிக்கு கொண்டாடப் படவிருக்கிறது.

வெள்ளவத்தை சைவ மங்கையர் கழக மண்டபத்தில் நடைபெறும் இவ்விழாவுக்கு சங்கத் தலைவர் செந்தமிழ் மாமணி மு. வயிரவப்பிள்ளை தலைமைதாங்குவார். பல அறிஞர்கள் விழாவில் கலந்துகொள்ள விருக்கின்றனர்.

## சுவாமி சிதானந்தஜி இன்று இலங்கை வருகிறார்

பம்பலப்பிட்டி, ஞாயிறு

திவ்ய ஜீவன சங்கத் தலைவர் ஸ்ரீமத் சுவாமி சிதானந்தஜி மகராஜ் இன்று நண்பகல் விமானம் மூலம் கொழும்பு வந்துசேருவார்.

கொச்சிக்கடை தம்பையா முதலியார் சத்திரத்தில் இன்று அவருக்கு கொழும்பு திவ்ய ஜீவனசங்கத்தினரால் வரவேற்பளிக்கப்படும்.

நாளை திங்கட்கிழமைகாலை கொழும்பு திவ்யஜீவனசங்க சிவானந்த படிப்பகத்தை சுவாமிகள் திறந்துவைப்பார்.

**யாழ்ப்பாணவிஜயம்**

ஸ்ரீ சிதானதஜி வரும் செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்வார். யாழ்ப்பாணத்துக்கு வரும் சுவாமிகளைக் கௌரவிக்கு முகமாக அன்று மாலை 6 மணிக்கு நகரசபைமண்டபத்தில் பாராட்டுவிழாவொன்று நடைபெறும். யாழ்ப்பாணமேயர் அளிக்கும் தேநீர் விருந்தொன்றிலும் அவர் கலந்து கொள்வார்.

மறுநாளான புதன்கிழமை சுவாமிகள் சுன்னுகம் திவ்ய ஜீவன சங்கத்திற்கு விஜயம் செய்வார்.

## வான்சாரதியை கைதுசெய்ய உத்தரவு

யாழ்ப்பாணம், ஞாயிறு

மரத்திற்கும், வானுக்கும் இடையில்அகப்பட்டு நசுங்கி மரணமான வட்டக்கச்சியை சேர்ந்த பாக்கியம் என்ற பெண்ணின் மரணம் பற்றி இரண்டாவது தினமாக நடைபெற்ற மரண விசாரணையின்போது, யாழ்ப்பாணம் நகரப்பகுதி மரண விசாரணை அதிகாரி திரு. ஏ. அமிர்தலிங்கம், சம்பவம் நிகழ்ந்தபோது வானை செலுத்தியவரான ஐயாத்துரை என்பவரைக் கைதுசெய்யும்படி பொலிசாருக்கு உத்தரவிட்டு, விசாரணையை ஒத்திவைத்தார்.

முதல்நாள் நடைபெற்ற விசாரணையின்போது, ஜேம்ஸ்அப்பு என்பவரே சம்பவம்நிகழ்ந்தபோதுவானைச் செலுத்தினுரென சாட்சியத்தின்போது கூறப்பட்டது. இரண்டாவது நாள் நடைபெற்றவிசாரணையில், ஐயாத்துரை என்பவரே வானைச் செலுத்தினுர் என்றும் ஜேம்ஸ் அப்பு, அந்தவானில் பிரயாணம் செய்தாரென்றும், அந்த வானில் பிரயாணம் செய்த இருவர் சாட்சியம் அளித்தனர். இதனைத் தொடர்ந்தே மரணவிசாரணை அதிகாரி மேற்கண்டவாறு உத்தரவிட்டார்.

மரணவிசாரணை அதிகாரி முன்னிலையில் முதலில் சாட்சியமளித்த ஐயாத்துரை, சம்பவம் நடந்த சமயம் தானும் வானில் சென்றதாகவும், அச்சமயம் வானைச் செலுத்திய சாரதியைத் தனக்குத்தெரியுமென்றும், வேறு 15 பேரும் வானில் இருந்தார்களென்றும் கூறினுர்,

அதன் பின் சாட்சியமளித்த சோமசுந்தரம்பெண் செவ்லம்மா கூறியதாவது: சம்பவம் நிகழ்ந்த சமயம் நானும் வானில் பிரயாணம் செய்தேன். ஐயாத்துரை தான் வானை அந்நேரம் செலுத்தினுர். அவரை எனக்கு நன்கு தெரியும். அவர் வானைச் செலுத்தும் போதுதான் சம்பவம் ஏற்பட்டது. ஜேம்ஸ் அப்பு அந்நேரம் எங்களுடன் வானில் பிரயாணம் செய்தார்.

சோமசுந்தரம் மகள் அன்னலிங்கம்சாட்சியமளித்தபோது, சம்பவம் நடைபெற்றபோது, தானும் வானில் பிரயாணம்செய்ததாகவும், ஐயாத்துரைதான் வானைச் செலுத்தியதாகவும் கூறினுர்.

சம்பவம் நிகழ்ந்தசமயம் வானில் பிரயாணம் செய்த கந்தையா பேரம்பலம், மாரிமுத்து பூபாலசிங்கம் ஆகிய இருவர்களும்காயங்களுடன் யாழ்ப்பாணம் பெரிய ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## பொன்னையா பதில் ஆடிட்டர் ஜெனரல்

பம்பலப்பிட்டி, சனி

உதவி ஆடிட்டர் ஜெனரல் திரு. பொன்னையா, ஆடிட்டர் ஜெனரல் திரு. பி. எல். டபிள்யு. பெர்ணுன்டோ வெளிநாடுகளில் தமது பயணத்தை முடித்துக்கொண்டு திரும்பும்வரை பதில் ஆடிட்டர் ஜெனரலாகப் பணிபுரிவார். கவர்னர் ஜெனரல், திரு. பொன்னையாவை தற்போது பதில் ஆடிட்டர் ஜெனரலாக நியமித்துள்ளார்,

திரு. பெர்ணுன்டோ ஒரு மகாநாடொன்றில் பங்குபற்றுவதற்காகவும் வெளிநாடுகளிலுள்ள இலங்கையின் தூதரகங்களைப் பார்வையிடுவதற்காகவும் நேற்று இங்கிருந்து பயணமானுர்,

### வேட்டைத் திருவிழா

உடுப்பிட்டி, சனி

நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலய வருடாந்த வேட்டைத் திருவிழா நேற்றுப் பிற்பகல் மிகுந்த கோலாகலமாக நடைபெற்றது.

### சனசமூக நிலையங்களின் பணிபற்றி யாழ்.மேயர்

சாவகச்சேரி, சனி

“சனசமூக நிலையங்கள் இப்படிப்பட்ட விழாக்களைச் சிறப்பாக நடாத்துவதோடு மாத்திரம் நின்றுவிடாது பொருளாதாரத் துறையில் மிகவும் பின்தங்கியநிலையில் இருக்கும் எமது பகுதியை பொருளாதாரத்தில் முன்னேற்றுவதற்குரிய வழிவகைகளிலும் ஈடுபடவேண்டும்” இவ்வாறுயாழ்ப்பாண மேயர் திரு. சு. செ. மகாதேவா அரியாலை சனசமூக நிலைய 16-வது ஆண்டுவிழா முதல்நாள் நிகழ்ச்சிகளின் பொழுது விஞ்ஞானம், விவசாயம், கைத்தொழில் பொருட்காட்சியைத் திறந்துவைத்துப் பேசுகையில் கூறினுர். அடுத்து நடைபெற்ற படக்காட்சியைத் தொடர்ந்து இல்லங்களிடையே நாடகப்போட்டிகள் நடைபெற்றன.

### ஔவை துரை. நடராஜன் வரவில்லை

யாழ்ப்பாணம், ஞாயிறு

கிளிநொச்சியில் நடைபெறும் திருக்குறள் மகாநாட்டில் கலந்துகொள்ளவிருந்த ஔவை துரை. நடராஜன் உரியநேரத்துக்கு விஸா கிடைக்காத காரணத்தினுல் இந்த மகாநாட்டில் கலந்து கொள்வதற்காக இலங்கை வரமுடியவில்லையென அறியப்படுகிறது.

திருமதி நடராஜனும் இதே காரணத்தினுல் மகாநாட்டில் கலந்துகொள்ள முடியவில்லை.

திரு. நடராஜனுக்கு இலங்கை வருவதற்கான விஸா கிடைத்ததும் அவர் இலங்கைவருவார் என்றும் துணுக்காய், பூநகரியில் நடைபெறவிருக்கும் திருக்குறள் மகாநாட்டில் அவர் கலந்துகொள்வாரென்றும் தெரிகிறது.



தராதரம் பெற்ற
கண் பரிசோதகர்
அனஸ்கோ,
12, மெயின் வீதி, யாழ்ப்பாணம்
(நூதனசாலைக்கு முன்பாக)

# வரி விளம்பரம்

### விற்பனைக்கு

பருத்தித்துறை காரியாதிகாரி கந்தோர், இ. போ. ச. டிப்போ, கந்தசுவாமி கோவில் ஆகியவற்றிற்கு அருகாமையில் சகல வசதிளுடன் வீடும், காணியும் விற்பனைக்குண்டு. விபரங்கட்கு நா. முத்துக்கிருஷ்ணர், இலட்சுமிபதி, புலோலி கிழக்கு, பருத்தித்துறை. 380

மல்லாகம், கோர்ட் றேட்டில் அமெரிக்கன் மிஷன் பாடசாலைக்கு முன்பாக நவீன வசதிகளுடன் கூடிய வீடும், 3 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு, விண்ணப்பிக்கவும்: த. குமாரசுவாமி, கோர்ட் றேட், மல்லாகம். 400

தொய்வு, சுசம், நீரிழிவு, வெள்ளை முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணனந்தர் கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

### தேவை

படித்த, விவேகமுள்ள குமாஸ்தாக்கள் (Clerks) தேவை. சம்பளத்துடன் லாபத்தில் பங்கும் கொடுக்கப்படும். பிணைப்பணம் கட்டத் தகுதியுள்ளோர் விண்ணப்பிக்கவும். இல. 504, மே/பா. ஈழநாடு, த. பெ. இல. 49, யாழ்ப்பாணம். 504

# இந்த வாரம் உங்கள் இராசி பலன் எப்படி?

தெல்லியூர் எழுதுகிறார்

[விசுவாவசு வைகாசிமீ 31ஞாயிறு (13-6-65முதல் 6 சனி (19-6-65) வரையுள்ள உங்கள்பலன்கள்]

### மேட இராசி

இவ்விராசியாளருக்கு இவ் வாரத்தில் சுபபலன்கள் கூடுதலாக நடக்கும். நல்ல நண்பர் சேர்க்கை, வாழ்க்கை வசதிகள் அமைதல், எதிரிகள்வீழ்ச்சி, தேகநலம், முயற்சிகளில் வெற்றி, குடும்ப வாழ்வில் அமைதியும் சுமுகநிலைமையும் நிலவுதல், பொருள்வள நிலைமையில் பெரும் அபிவிருத்தி, ஏற்படல், சொத்துக்களிலிருந்து நல்ல வருவாய் கிட்டுதல், உத்தியோகத் துறையினருக்கு மேலதிகாரிகள் உதவிகள் கிடைத்தல், மதிப்பு அதிகரித்தல், வர்த்தகத்துறை-வேறு தொழில் துறையினருக்கு நற்பலன்கள் அதிகமாகுதல், பெண்களுக்கு மதிப்புபழையவாறு திரும்புதல், கல்விச்சிறப்பு, குடும்பசுகம் ஆதியனகாணப்பட இடமுண்டு.

### இடப இராசி

இவ்விராசியாளருக்கு இவ் வாரத்தில் நல்லோர் சேர்க்கையால் உதவிகள் கிடைத்தல், திறமை மதிக்கப்பட்டு அதற்குரிய இடம் கிடைத்தல், குடும்பத்திலும் வெளியிலும் சுமுகமான சூழல் ஏற்படல், எதிரிகள் வீழ்ச்சியுறல், மனச்சஞ்சலம்காரணமாக தேகத்தில் ரோகமேற்படல், பொருள் வகையில் சிறிது அபிவிருத்தி காணல், கமத்தொழில் உயர்ச்சியுற, அரசாங்க உத்தியோகத்துறையினருக்கு நன்மைகள் கிட்டுதல், வர்த்தகத் துறை அபிவிருத்தியுறல், பெண்களுக்கு தேகாரோக்கியம் குன்றுதல், சமூகத்தில் மதிப்புக் குன்றுதல், மாதா வழி உதவி கிடைத்தல் ஆதியன காணப்படஇடமுண்டு.

### மிதுன இராசி

இவ்விராசியாளருக்கு இவ் வாரத்தில் முன்னைய கஷ்ட பலன்கள் சற்றுக்குறைந்தும் கல்வித்துறையில் சிறப்பு, சுபகருமங்களில் ஈடுபாடு, சந்தோஷமான வாழ்வுக்கு ஆரம்பநிலை ஏற்படல், தொழில் வகையில் சிறிது இலாபம் கிட்டுதல், வர்த்தக அபிவிருத்தி காணல், தேகாரோக்கியம் விருத்தியாதல், பண நிலைமையில் திருப்தி காணல், கமத்தொழில் மத்திமபலன் தருதல், உத்தியோகத்துறை நற்பலன் தருதல், பெண்களுக்கு விவாகப் பேறு குழந்தைப் பேறு போன்ற சுபகருமங்கள் கிட்டுதல், மதிப்புயர்தல், பணவரவு ஆதியன காணப்பட இடமுண்டு.

### கடக இராசி

சென்ற வாரங்களிலும் பார்க்க இவ்வாரம் இவ்விராசியாளருக்கு நற்பலன்கள் சற்றுக் கூடுதலாக நடக்க இடமுண்டாயினும் பிரயாணங்கள், பணம் கொடுக்கல் வாங்கல் விடயங்கள், பொறுப்பு நிற்றல் ஆதியனவற்றில் கவனம் வேண்டும். பொதுவாக இவ் வாரம் தேகாரோக்கியம் திருப்தியான நிலைமையடைதல், முயற்சிகளில் வெற்றி கிட்டுதல், பணவரவு, கமத்தொழில்சிறப்பு, உத்தியோகத் துறையினருக்கு நற்பலன் காணப்படல், வர்த்தகத்துறையினருக்கு வர்த்தக அபிவிருத்தி, அதிகவருவாய் காணல், பெண்களுக்கு பணப்புழக்கம், குடும்பத்தில் சுகம், தேகாரோக்கியம் கெடுதல், ஆண்களால் கஷ்டம் ஆதியன காணப்பட இடமுண்டு.

### சிங்க இராசி

இவ்விராசியாளருக்கு இவ் வாரத்தில் பலன் திருப்திகரமாகக் காணப்பட இடமுண்டு, முன்னையிலும் பார்க்க தொழிலில்நற்பலன் கிட்டுதல், நல்லோர் சேர்க்கையால் பலன் பெறல், நோக்கங்கள் பெருமளவில் கைகூடல், இலாபம் கிட்டுதல், குடும்பத்தில் அமைதி நிலவுதல், எதிரிகள் வீழ்ச்சியடைதல் ஆதியனவும் உத்தியோகத்தினருக்கு மேலதிகாரிகள் உதவி கிட்டுதல், மதிப்புப் பெறுதல், பணவரவு, கமத்தொழில்-வர்த்தகம் விருத்தியடைதல், பெண்களுக்கு பிரயாணசுகம், தொழில் உயர்வு, குடும்பசுகம், சமுதாய மாற்றம் ஆகியன காணப்பட இடமுண்டு.

### கன்னி இராசி

இவ்விராசியாளருக்கு இவ் வாரத்தில் நற்பலன்கள் அதிகமாகவுள. இவர்களுக்கு தேகாரோக்கியச் சிறப்பு, எதிரிகள் அழிவு, பொருள்வரவு, முயற்சிகளில் வெற்றி, நல்ல செல்வாக்குடைய நண்பர் சேர்க்கை, குடும்ப சுகம், குடும்பத்தில் நல்லபிப்பிராயம் நிலவுதல், பணவகையில் பழைய கடன்கள் வசூலாதல், பிறர் உதவிகிடைத்தல், உத்தியோகத்துறையில் பெருமாற்றங்கள் - உயர்வுகள்-சலுகைகள் கிடைத்தல், கமத்தொழில்-வர்த்தகம் சிறப்படைதல், பெண்களுக்கு வாழ்க்கையில் சீர் சிறப்புண்டாதல், நல்ல களத்திரமடைதல், மதிப்புப் பெருகுதல் ஆதியன காணப்பட இடமுண்டு.

### துலா இராசி

இவ்விராசியாளருக்கு இவ் வாரத்தில் இருவிதபலன்களும் கலந்து நடக்கும். நற்பலன்களாக தேகசுகம், பணவருவாய், தொழில்வெற்றி, எதிரிகள் வீழ்ச்சி, நற்பெயர் ஆதியனவும் தீப்பலன்களாக கஷ்ட பிரயாணம், அதிக செலவு, புதிய எதிரிகள் தோன்றல் ஆதியனவும் காணப்பட இடமுண்டு. மேலும் உத்தியோகத்துறையினருக்கு- வர்த்தகத்துறையினருக்கு-கமத்தொழிலாளருக்கு பலன்கள் கலப்பாகவே நடைபெறும். பெண்களுக்கு குடும்பவாழ்வு சிறப்பாகவும் பணவருவாயுடையதாகவும் இருப்பினும் ஆண்கள் தொடர்பில் அவதானமும் வேண்டும்.

### விருச்சிக இராசி

இவ்விராசியாளருக்கு இவ் வாரத்தில் தேகசுகம், குடும்ப சுகம், நல்லோர் சேர்க்கை, மதிப்புயர்ச்சி, முயற்சிகளில் வெற்றி, பிரயாணங்கள், இனபந்துக்களுடன் சிறிய சச்சரவுகள், பணவருவாய் காணல், கமத்தொழில் மதிப்பாக உயர்வடைதல், உத்தியோகத் துறையில் மாற்றங்காணல், மேலதிகாரிகள் உதவிகிட்டுதல், ஊழியர் உதவி, வர்த்தகத் துறையில் அதிக வருமானம் கிடைத்தல், குடும்பப் பிரச்னைகளால் எதிர்பார்க்கும் பயன் குறைவடைதல், பெண்களுக்கு ஆண்கள் தொடர்பால் சங்கடம் விழைதல், சமூகத்தில் மதிப்புக் குறைதல், பொருள் முடை காணல் ஆதியன உண்டாம்.

### தனுசு இராசி

இவ்விராசியாளருக்கு இவ் வாரத்தில் இருவிதமான பலன்களும் முக்கியத்துவமடைய இடமில்லை., எப்படியிருப்பினும் தொழிலில் ஓரளவு பலன் கிட்டல், குடும்பசந்தோஷமும் மதிப்பும், இனபந்துக்களுடன் சண்டை சச்சரவும், அபிப்பிராய பேதமும் புதியமுயற்சிகளில் தோல்வியும், முன்

(10-ம் பக்கம் பார்க்க)




அனுதினமும் நெற்றி வியர்வை சிந்தி, வயலில், உற்பத்திசாலையில், தொழிற்சாலையில், அல்லது காரியாலயத்தில் உழைக்கும் அவருக்கு நிரம்பிய பலமும் சக்தியும் அவசியம். ஆகவே அவருக்கு மாமைட் விசேஷமாகத் தேவை. B வர்க்க விட்டமின்கள் நிறைந்திருக்கும் மாமைட் அவரை அனுதினமும் திடகாத்திரமாகவும் சுகமாகவும் இருக்கச் செய்கிறது.

ஆரோக்கியமாக சக்திமிகுந்து இருப்பதற்கு உங்கள் தினசரி ஆகாரத்தில் B விட்டமின்கள் அவசியம். உங்களுக்கு அனுதினமும் தேவையான B விட்டமின்கள் அனைத்தையும் அளிப்பது மட்டுமின்றி, மாமைட் ஒரு சிறந்த உணவு பொருளாகவும் இருக்கிறது. வெந்நீரிலோ அல்லது வெந்நீருடன் ஓரிரு சொட்டு எலுமிச்சம் பழச்சாறு கலந்தோ அல்லது தாளித்தோ மாமைட் அருந்தலாம். மாமைட்டை பட்டருடன் அல்லது பட்டரின்றி ரொட்டி, பிஸ்கட், அப்பம் இவற்றில் இலேசாக பூசி சாப்பிடலாம். குழம்பில் அல்லது சூப்பில் மாமைட் சேர்ப்பதனுல் அவற்றிற்கு மேலும் சுவையூட்டுகிறீர்கள். B வர்க்க விட்டமின்களை எளிதாக உட்கொள்வதற்கு மிக்க சுவையான முறை மாமைட்டை உங்கள் தினசரி உணவுடன் சேர்த்துக்கொள்வதே.

மாவுப் பொருள்
சர்க்கரைப் பொருள் அற்ற,
B விட்டமின் நிறைந்த,
தூய்மையான,
தாவர உணவுப்
பொருள்.

மாமைட்



# கண்கள்

— காங்கேயன் —

வாய் மட்டும் தானா பேசும், கண்களும் பேசும். அற்புதமாகப் பேசும். ஒரு நொடிக்குள் ஆயிரம் கதைகள் சொல்லிவிடும். அதன் ஒரு மின் வெட்டில் காவியமே விரியும். அப்பொழுது அங்கு வாய்ப் பேச்சுக்கே இடமிருக்காது போய்விடுகிறது. இதனைத்தான் வள்ளுவரும்,

கண்ணொடு கண்ணிணை
நோக் கொக்கின்
வாய்ச் சொற்கள்
என்ன பயனுமில''

என்றார். காதல்மங்கையரின் ஒரு கடைக்கண் பணியிலே அவர் தம் காதலர் ககனத்தில் ஏறி விண்ணையும் சாடுவார்களே என்றான் பாரதி. அதாவது, கூண்டோடு கைலாசம்போய் விண்ணைச் சாடுவதற்கு உரிய ரொக்கெட் சாதனத்துக்கு தேவைப்படும் எரிபொருள் மாதர் கடைக்கண் நோக்கில்தான் கிடைக்கிறதாம்!

பூலோக சாம்ராஜ்யங்கள் அழிந்துபட்டது எம்மாத்திரம்!

'அடி என்னோடிணங்கி மணம்புரிவாய் என்றால் விழிக்கோணத்திலே நகை காட்டிச் செல்வாள்.'

ஆமாம், கண்கள் தாம் சிரிக்கின்றன. பவளவாய் செய்யும் அத்தனைகாரியங்களையும் அதற்குமேலும் கண்கள் செய்கின்றன. பேசுகின்றன, சிரிக்கின்றன. வெம்பிஅழுகின்றன. நெருப்பைக் கக்குகின்றன. அருள் பொழிகின்றன. ஆசையூட்டுகின்றன. ஆடவரைக் காந்தம் போலக் கவர்கின்றன. இத்தனை மௌன பாஷைக்கும் மின்வெட்டுக் கவர்ச்சி உண்டு. பெண்களின் கண்களைப் பற்றிப் பாடாத புலவர்கள் இலர். அவற்றின் வசிய சக்தியை வியக்காத ஆடவர் மிகச்சிலரே. முத்தோ, வைரமோ, இரத்தினக்கல்லோ அல்லது அந்த சூரியர் சந்திரர் தாமோ. மங்கையர் தம் கயல் விழிக்குள் ஒளிவீசும் 'அற்புதம்'தான் என்ன என்று அதிசயிக்கிறான் ஒரு கவி.

கயல்விழி, சேல்விழி, மான்விழி, குவளைக்கண், பிறைக்கண் என்று கண்களை அழகுபடுத்த எவ்வளவோ உவமைகள் கூறுவர். இப்படி அழகான நயனங்களை ஒருவர் தாம் இறந்தபோது கண்ணில்லாதவருக்குத் தானம் செய்துவிட உடன்படுவதையும் பார்க்கிறோம்.

இங்கே வள்ளுவர்ஒருவனை நமக்கு அறிமுகப்படுத்துகிறார். அவனோ தனது இரு விழிகளையும் தன் உள்ளம் கவர்ந்த காதலிக்குத்தானம் செய்வதற்குத் துணிந்துநிற்கிறான்.

அந்தத் தலைவன் தன் அன்புக் காதலிக்கு எத்தகைய இடம் அளித்து அவளை ஏற்றுக்கொள்ளலாம் என சிந்தித்தான். அவளோ அவன் நெஞ்சத்தில் ஏற்கனவே இடம் பிடித்துநிரந்தரமாக அங்குகுடிகொண்டிருப்பவள் அவளுக்கு அந்த ஸ்தானம் போதாது. இன்னும் ஒரு சிறப்பான பீடம் அளித்து அவளை மகிழ்விக்க ஆசைப்படுகிறான். அத்தகையதோர் உயரிய நிலையை அவளுக்கு எப்படித்தருவது? முடிவில் தன் கண்களை நோக்கிச்சொல்வான்; 'என் கண்ணின்கருமணியில்உள்ள பாவையே நீ இன்றைக்கே என்கண்களிலிருந்து அகன்றுவிடு. என் நெஞ்சம் மறவாத பெண்ணுக்கு அந்த இடத்தைத் தரப்போகிறேன். நீ மறுப்பொன்றும் கூறமாட்டாயல்லவா? என் கண்ணல்லவா? அழுது கிழுது, கண்ணீர்வடிக்காமல் உன் இடத்தை உடனே காலிசெய்துவிடு. என் நெஞ்சகத்தே குடிகொண்டிருப்பவள் அகக்கண்ணாக என்றைக்கும்உள்ளொளி பரப்பி ஒளிர்ந்துகொண்டிருக்கிறாள். ஆதலால் முகத்தில் நீங்கள் இருப்பதற்கு அவசியமே இல்லை. அந்நிலையில் இரண்டு புண்களாக அங்கிருந்து ஏன் அவமதிப்புற வேண்டும்? இனிமேல்அவளே என்னிருகண்களாவாள். கண்ணில் மணியாடுபாவையுமாவாள். ஒளிவிளக்குமாவாள்- என்றுஇவ்வாறாக இறைஞ்சுகிறான் அவன்.

நெஞ்சத்தே ஒளிபரப்பி நிற்பாளை கண்ணின் இரு மணிகளாகவும் ஆக்கிவிட்டால் தான் வேறு அவள் வேறு என்ற நிலையே அற்றுப்போய்இருபேரும் ஒன்று கலந்துவிடலாமன்றோ. அந்த மன வேட்கையின் உந்துதலின் பேரில்தான் இவ்வாறு தன் கண்களையே குத்திக் குருடாக்கிக்கொள்ளத்துணிகிறான் காதலன்.

உன் கண்களைத் தழுவும் உறக்கம் ஆகேனோ, உன் மார்பில் தொங்கும் வைரமணிகள் ஆகேனோ. என்று ஏங்கும்காதலர்களைப்பற்றிப் புலவர்கள் பாடியிருப்பதும் இங்கு எண்ணற்பாலது.

முன்னால் தோன்றும் ஓர் உருவம் கண்ணின் பாவையில் விழுகிறதல்லவா? அந்த உருவத்தையே கண்ணின் பாவை ஆக்கிவிட்டால்? காதலின் வேகம் தான் எத்தகையது!

இப்படியாக காதலின் வேகத்தை அளந்துகாட்டும் விறுவிறுப்பான ஒரு காதல் கதையைத்தான் வள்ளுவர் இரண்டே இரண்டு அடியில் கச்சிதமாகச்சொல்லியிருக்கிறார்.

கருமணியிற் பாவாய் நீ
போதாய் யாம் வீழும்
திரு நுதற்கு இல்லை இடம்

இந்தச் சமயம் காதலியின் நிலை என்ன என்பதையும் பார்ப்போம். அவளுக்குத் தன்காதலனை மனத்தில் நினைத்துக்கொண்டிருந்ததில் சலிப்புத்தட்டிவிட்டதாம். அதனால் அவனைக்கண்குளிரப் பார்க்க ஆசைப்படுகிறாள். இந்நிலையில் தன் நெஞ்சத்திடம் சொல்வாள்.

கண்ணும் கொளச்சேறி
நெஞ்சே இவையென்னைத்
தின்னும் அவர்க்காண
லுற்று

நெஞ்சே, நீ என் காதலனை அணுகும் போதெல்லாம் இனி கூடவே என்னிரு கண்களையும் கொண்டுசெல்வாய். அவை, அவரைப் பார்க்கும் கொடுமையில் என்னைப் பிடுங்கித் தின்கின்றன.—என்கிறாள். இவள், சுடச்சுட உணவு அருந்துவதேயில்லையாம். ஏன் தெரியுமா? தன் காதலன் நெஞ்சகத்தே குடிகொண்டிருப்பதால் சுடச்சுட உண்பதெல்லாம் அவனைச் சுட்டுவிடுமே என்று கருதியதனால்தான்.

''நெஞ்சத்தார் காதலர
வராக வெய்துண்டார்
அஞ்சுதும் வேபாக்கு
அறிந்து''

## கடலுக்கடியில் தொல்பொருளாராய்ச்சி

கடலுக்கடியில் தொல்பொருளாராய்ச்சி மேற்கொள்வோருக்கான முதல் பயிற்சிப்பள்ளி என்று சொல்லக்கூடிய பயிற்சிக்கூடம் சதாம்டன் அருகே உள்ள ஸ்வாநாகேபே என்னுமிடத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பிரிட்டிஷ் நீர்மூழ்கி சங்கத்தின் விஞ்ஞானத் தொழில் நுட்பப்பிரிவினரும் லண்டன் பல்கலைக் கழகத்தின் தொல் பொருள் ஆராய்ச்சிக்கழகமும் கூட்டாகச் சேர்ந்து இதனை ஆரம்பித்துள்ளன. கழகத்தின் தலைவரான டாக்டர் ஜோவேஷ்டர் கூறுகையில் ''தொல் பொருள் ஆராய்ச்சியாளர்களில் ஒருசிலர்தான் நீர் மூழ்குவோராக உள்ளனர். நீர்மூழ்குவோரில் மிகச் சிலரே தொல் பொருள் ஆராய்ச்சியாளராகஉள்ளனர்'' என்றார். இப்பயிற்சிக் கூடத்தில் தொல் பொருள் ஆராய்ச்சித்துறை மாணவர்களுக்கு நீரில் மூழ்குதல், நீருக்கடியில் படப்பிடிப்பு ஆகியவை சொல்லிக்கொடுக்கப்படும். அதேபோல நீர் மூழ்குவோருக்கு தொல்பொருள் ஆராய்ச்சி பற்றிய அடிப்படைப்பாடல்கள் கற்றுத்தரப்படும்.

## குருவெனும் மகனே...!

—"குறமகள்"—

### 1. இன்பியல்

என்னுள்ளே உயிர்த்து எந்தன்
உடலுளே வளர்ந்த பிண்டம்
பன்னெடுங் கனவு காட்டிப்
பற்பல பெருமை சேரக்
கன்னலில் தேனைச் சொட்டும்
களிமிகக் கூட்டி யன்று
மன்னரும் மயங்கும் நன்னாள்
மணியெனத் தோன்றி னானே.

''தையலும் இல்லாப் பேறு
தையலே உன்ன திட்டம்
பையனும் பிறந்தா'' னென்றே
பணிபுரி மகளிர் சொன்னார்
மையலினூடேகி ளர்ந்த
மகிழ்ச்சியால் நன்றி சொன்னேன்
ஐயனே, உன்னைக் கொஞ்சி
ஆயிரம் பலமும் பெற்றேன்.

முகைமலர் அவிழ்ந் தாலன்ன
முத்திளம் முறுவல்; சுருண்ட
சிகைவரை சென்ற நுதலில்
சிறுசிறு புருவம்; நடுவே
நகையொளிர் நீலக் கண்கள்;
நவிலரும் அழகுச் சொக்கில்
தகைவுறு சுழிகள் முகிழ்க்கும்
தாடையில் சிரித்த மச்சம்.

ஆட்டமும் பாட்டுங் கூத்தும்
அதிசயக் கதைகள் கேட்கும்
நாட்டமும் வேண்டும் 'பைலா'
நடனமும் அவர்க்கே சொந்தம்
ஓட்டமும் கூட்டத் தோடு
ஒளித்து விளையாட்டும் பந்
தாட்டமும் கண்ட கண்கள்
ஆனந்த மடைவ தேனோ

மூன்றரை யாண்டு வாழ்ந்த
முழுநிலா; உற்றவர்க்கோர்
தோன்றலே! குளிரறையாம்
தோற்றமோ! நிழற் கருணை
கான்றிடும் ஒளிசேர் நயனம்;
கருத்தையும் கவரும் வண்ணம்;
ஆன்ற சொற் கூட்டமழலை;
ஆரைத்தான் அடிமையாக்கான்

அருகினில் வந்தே முதுகினில் ஏறி
அரிய மென் மழலைச் மொழியால்
பெருகிய கதைகள் கூறியெமக்கோர்
பெருமிதம் தந்து மகிழ்வித்தாய்
'குரு'வெனும் மகனே! எங்குலத்தலைக்கக்
குஞ்செனவந்தோய்! குழைவாய் நின்
வருகையால் உள்ளம் மலர்ந்தோம்! எம்மை
வாடவிட்டனையால்! வல்வினை யந்தோ!

(அடுத்த இதழில் முற்றும்)

## நப்பலாம் நடந்தது

ஆண்டவனின் கைவண்ணந்தான் எம் கண்ணுக்கினிய காட்சிகள் எனில், அனைத்துலக அதிசயங்களும் அவன் கிருபையால் நிகழ்வன என்றே அமைதி கொள்ள வேண்டும்.

நன்மையும், தீமையும் நன்மைக்கே நடைபெறுகின்றன என்பது சுயாபிப்பிராயம். நல்லவர்களுக்கு அல்லன தீண்டா; அல்லனவற்றால் நல்லவர் கெடார் என்பன பொதுவான அறிவு.

பேராசிரியர் கல்கி (ரா. கிருஷ்ண மூர்த்தி)யைப் பொறுத்தவரையில் இலக்கிய நன்மைகளும், வாழ்க்கைத் தீமைகளும் நிறைந்திருந்தன. அவர் ஒரு நாவலாசிரியராக, சிறுகதை யாசிரியராக, விமர்சகராக இவற்றுக்கும் மேலாகப் பத்திரிகாசிரியராக வாழ்ந்திருப்பினும் தெய்வானுகூலம் மிக்கவராக விளங்கியிருக்கிறார் என்பது அவர் வாழ்க்கையில் நடைபெற்றதோர் சம்பவத்தைக் கொண்டு ஊகிக்கலாம்.

மாநாடொன்றிற்பேராசிரியர் பேசிக்கொண்டிருந்தார். நிறைந்துவழிந்த சனக்கூட்டத்தின் நெரிசலாலும், அதிலெழுந்த குமைச்சலாலும் மின்விசிறிகள் அனைத்தையுமே இயங்கவிட்டிருந்தனர்.

மேடையில் பேராசிரியர் கல்கியுடன் ஏனைய பேச்சாளர்களும் அமர்ந்திருந்தனர்.

மேடையின் நடுவில் வைக்கப்பட்டிருந்த மேசைக்கும், ஒலிபெருக்கி 'மைக்' குக்கும் மேலே மின்சாரவிசிறி சுழன்றுகொண்டிருந்தது.

பேராசிரியர் கல்கி பேசுவதற்கு எழுந்து, மேசையருகே வந்து 'மைக்'கைச் சரிசெய்து, வணக்கந் தெரிவித்துப் பேசத்தொடங்கினார்.

பேச்சின் நடுவே கல்கி அவர்கள் நடந்துகொண்டவிதம் எல்லோரையும் திகைக்க வைத்ததுடன், பலரின் முகங்களிற் கேள்விக் குறியையும் எழுப்பியது. பேராசிரியர் கல்கி பேசியதை விட்டுவிட்டு, திடீரென்று வெளிக்கதவை நோக்கி நடை போட்டது கூடியிருந்து ஆவலாக அவர்தம் பேச்சைக் கேட்டிருந்தவர்களைச் சிறிது குழப்பியது.

கல்கி அவர்கள் தம் இனிய சொன் மழையை நிறுத்திய அதிர்ச்சியுடன் அதிர்ச்சியையும், ஒருபுறம் ஆச்சரியத்தையும் அளித்தது.

பேராசிரியர் கல்கி பேசிக் கொண்டு நின்ற அதே இடத்தில் மேலே சுழன்று கொண்டிருந்த மின்சார விசிறி விழுந்துவிட்டது. அந்த இடத்தில் அப்பொழுது பேராசிரியர் நின்றிருப்பின் அவருடைய பூத உடல் பொறுக்கி எடுக்கும் நிலைக்கு உள்ளாகியிருக்கும்.

நிகழ்ச்சிக்குப்பின், தம்மையும் அறியாது வெளியே சென்று திரும்பிக் கொண்டிருந்த பேராசிரியர் கல்கி சிறிது முறுவலுடன், தம் உயிரைத் தாமே காப்பாற்றிய பெருமையுடன் மீண்டும் பேச்சை ஆரம்பித்தார்.

மக்களுடைய ஆரவாரம் அடங்குவதற்குச் சிறிது நேரம் பிடித்திருக்கும் என்பதை நாம் சொல்லித் தெரியவேண்டியதில்லை.

— கைலாஸ்

## கண்பார்வை அளிக்கும் அதிசய சாமியார்

குட்டநோயைப் போக்கும் அதிசய சாமியார் ஒருவர் திருச்சி வந்துள்ளார். கேரள மாநிலத்தைச் சேர்ந்த இவர் இப்பொழுது கரூர் சாலையில் உள்ள புலிவலம் என்னும் கிராமத்தில் தங்கியுள்ளார். இவர்கண்பார்வை இழந்தவர்கட்கும் குட்டநோய் உள்ளவர்கட்கும் சிகிச்சை அளித்து வருவதாகத் தெரிகிறது. இவரைக் காண திரளான மக்கள் வந்து செல்கின்றனர். அவர் குட்டநோய் உள்ள ஒரு நோயாளியை இடுப்புவரை வெட்டப்பட்ட குழிஒன்றில் நீரை நிரப்பி நிற்க வைக்கிறார். இதேபோல் 10 நாட்கள் செய்கிறார். பிறகு நோய் குணமாகி விடுகிறதாம். கண்பார்வை இழந்தோர்க்கு ஏதோ பச்சிலைச் சாற்றைப் பிழிகிறாராம். உடனே பார்வை வந்துவிடுகிறதாம். இந்தச் சாமியார் அலங்கரிக்கப்பட்ட மோட்டாரில் ஊர்வலமாகஅழைத்துச் செல்லப்பட்டார்.

# ஈழநாடு

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna. Phone: 389

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு வைகாசி மீ 31உ. (13-6-65)


## புனிதத் திருநாளில் மகானின் விஜயம்

இன்று இலங்கைக்கு இருவிதங்களில் புனிதமான நாளாகும் ஒன்று போஷன் திருவிழா. மற்றொன்று, பாரதநாட்டிலிருந்து சுவாமி சிதானந்த எனும் மகானும் இன்றுதான் ஈழத்துக்கு விஜயம் செய்கின்றார்

இருபத்தி இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன் இதேதினத்தில் அசோக சக்கரவர்த்தி. தன் மகன் மகேந்திரன், புதல்வி சங்கமித்தை இவர்கள் மூலம் இந்நாட்டுக்கு புத்த தர்மத்தை அனுப்பிவைத்த புனிதநாளென்று இத்தினத்தை இங்குள்ள பௌத்தர்களனைவரும் பயபக்தியுடன் கொண்டாடுகின்றார்கள்.

புத்த தர்மத்துடனே மகேந்திரன் வந்த அதே நாளில் திவ்யஜீவன சங்கத் தலைவர் சுவாமி சிதானந்தர் இமயத்திலிருந்து சர்வசமய சமரசச் செய்தியைக் கொண்டுவருவது குறிப்பிடத்தக்கது. இம்மகானையும் பௌத்தர்கள் உள்ளிட்டு எல்லாச் சமயத்தவரும் வரவேற்று அவரை தரிசிக்கவும் அவரது உபதேசத்தைக் கேட்கவும் ஆவலுடன் காத்திருக்கின்றார்கள்.

பாரதநாட்டுக்கும் ஈழத்துக்கும் ஆத்மீகத் தொடர்புகள் அன்றுமுதல் இன்றுவரை இருப்பதைப் பார்க்கின்றோம். இடையிலே எவ்வளவோ சோதனைகள் எல்லாம் ஏற்பட்டன. என்றாலும் இந்தத் தொடர்புகள் அறுபடவில்லை. எதிர்காலத்திலேயும் இந்த உறவுகள் மேன்மேலும் பலப்படுமென்பதில் ஐயமில்லை.

நம்மிடையே சமயங்கள் பல உள்ளன. சமயங்கள் எதற்கு? மக்களுக்காக சமயங்களா? சமயத்துக்காக மக்களா? நமக்காகத்தான் சமயங்களும் தெய்வங்களும்கூட. நமது துன்பங்களைத் துடைத்து இன்பத்துக்கு வழிகாட்ட ஏற்பட்டனவே சமயங்கள். வேற்றுமைகளை நீக்கி, அன்பை வளர்த்து மக்களிடை ஒற்றுமையை வளர்ப்பதே சமயங்களின் முக்கிய கடமை.

ஈழத்தில் மட்டுமன்றி உலகெலாம் சமயங்கள் பல இருந்தும் மக்கள் ஒற்றுமையின்றி, அன்பின்றி துன்பச்சுழியில் அகப்பட்டுத் தவிக்கின்றனர். சமயங்களின் பெயராலேயே வேற்றுமைகளும் துவேஷங்களும் கிளம்புகின்றன. மதங்கள் மக்களின் துன்பத்தைப்போக்க உதவுவதற்கு பதில், அவர்களிடையே அன்பை வளர்த்து, ஒற்றுமையை பலப்படுத்துவதற்கு மாறாக, மதங்களின் பெயராலே மக்களுக்குத் தீங்குகளும் விளைவிக்கப்படுகின்றன.

இது மதங்களின் தவறா? அல்ல. மதங்களைத் தங்கள் சுயநலத்துக்காகச் சிலர் பயன்படுத்துவதாலும் மதங்களின் அடிப்படைப் போதனைகளை மக்கள் மறந்து அவற்றைப் பின்பற்றத் தவறுவதுதான் இன்றைய அவல நிலைக்கு முக்கிய காரணமாகும். அவரவர்கள் தங்கள் தங்கள் மதநெறிப்படி நடப்பதுடன்மட்டுமன்றி பிற மதத்தவர்களை மதித்து, அம்மதத்தவருடன் நல்லுறவுகொண்டு, அன்புடன் வாழவேண்டியதே அதிக முக்கியமாகிறது. மதமாற்ற முயற்சிகளை விட்டு, ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் மதங்களின் அடிப்படைக் கோட்பாடுகளின்படி நடக்க முற்படுவதுடன் மற்ற மதங்களின் உண்மைகளையும், பல மதங்களுக்கிடையேயும் உள்ள பொதுத்தன்மைகளையும் ஆராய்ந்து உணர்வதாயின், மக்களின் தனிவாழ்வு மட்டுமன்றி பொதுவாழ்வும் அதிக இன்பமாகமுடியும்.

இன்று ஈழத்துக்கு மட்டுமன்றி உலகுக்குத் தேவையான தங்கள் தங்கள் சமயநெறிப்படி மக்கள் நடப்பதுடன். பல சமயங்களிடையிலும் சமரச உறவும் ஒத்துழைப்பும் ஏற்படவேண்டியதே. இதற்கான முறையில் திவ்யஜீவன சங்கத்தை சுவாமி சிவானந்தர் அவர்கள் அமைத்து, உலகெலாம் பிரசாரம் செய்ய ஒழுங்குசெய்தார். அவருக்குப் பின் அவரது முதல் சீடரான சுவாமி சிதானந்தாஜி அவர்கள், அந்தச் சங்கத்தின் தலைமைஸ்தானத்தை ஏற்று சர்வசமய சமரச சேவையை மேலான முறையில் செய்வதுடன், ஈழத்துக்கும் இப்போது வருகை தந்துள்ளார்கள். இம்மகானின் விஜயத்தால் ஈழம் புனிதமடைகின்றது. அவரது தரிசனமும், உபதேசங்களும், நம் துன்பங்களை நீக்கி இன்பத்துக்கு வழிகாட்டப் பெரிதும் உதவுமென்றே நம்புகிறோம்.

# மறவன்புலோ ஐயனார் ஆலயதீர்த்தம்

மறவன்புலோ
**சச்சிதானந்தன்**

இன்று ஐயனார் கோவிலடி விநாயகர் ஆலயத்தில் தீர்த்தத்திருவிழா நடைபெறுகிறது. படைத்தல், காத்தல், அழித்தல், ளல், மறைதல் என்கின்ற ஐந்தொழில்களையும் இறைவனே செய்கின்றான் என்ற உண்மையினை எடுத்துரைப்பன திருவிழாக்கள். 'நான்' 'எனது' என்கின்ற எண்ணம் எம் உள்ளத்தில் எழுகின்ற பொழுதெல்லாம் நாம் இறைவனை மறந்துவிடுகின்றோம். அவனே எல்லாமாகி இருக்கின்றான் என்ற உணர்வு எம்முள்ளத்தை விட்டு நீங்கி விடுகின்றது. ''எம்மால் செய்ய இயலாதது எது?'' என்கின்ற ஆணவ முனைப்பு எம்மை இறைவனின் அணைப்பிலிருந்து நெடுந்தொலைவு கொண்டுசெல்கின்றது. நாம் இறைவனை மறந்துவிடுகின்றோம்-நாம் மறந்தாலும் இறைவன் நம்மை மறப்பதில்லை. நாம் அவனை விட்டுச் செல்ல முயன்றாலும் அவன் நம்மை விடாமல் தொடருகிறான். சேயினை மறந்து தாய் இருப்பாளா? அதுபோலவே இறைவனும் நம்மை மறப்பதில்லை.

**ஆண்டுக்கொரு விழா**

ஆண்டுக்கொருமுறை ஐயனார் கோவிலடி விநாயகர் கோவிலில் திருவிழா நடைபெறும். இத் திருவிழாத் தொடரினைக் காண மக்கள் கூடுவார்கள். கோவிலைச்சுற்றியுள்ளமக்களோடு சுற்றுப்புறக் கிராமங்களில் உள்ள மக்களும்வருவார்கள். இறைவனிடம் அருளை வேண்டி நிற்பார்கள்; இருளகற்றும் மருந்துகேட்பார்கள்; ஆன்ம ஈடேற்றத்துக்குரிய 'பொருள்' கேட்பார்கள். வேண்டுவார் வேண்டுவதை ஈய்ந்தருள் செய்வான் இறைவன். அவன் அருள் மக்களின் உள்ளத்திலுள்ள இருளை நீக்கும். அடியார்கள் மகிழ்ச்சி வெள்ளத்தில் திளைப்பார்கள்; இறைவனோடு ஒன்றித் தம்மை மறந்து நிற்பார்கள். சிறுவர்கள் தேன் தமிழில் இசைபாடுவார்கள். தேவார திருவாசகங்களின் பண்ணினைக்கேட்டும், அதன் பொருளினை உணர்ந்தும் அடியார்கள் இன்புறுவார்கள்.

**வினை தீர்க்கும் விநாயகன்**

விநாயகப் பெருமான்வினை தீர்க்கும் பெருமான்; விநாயகனே விண்ணுக்கும் மண்ணுக்கும் நாயகன்; அவனே ஆசைகளை அறுக்கவல்லான்; விக்கினங்களை விலக்கும் விக்னேஸ்வரனும் அவனே. விநாயகப் பெருமானின் எழிலான தோற்றத்தை எண்ணுபவர்கள் து பத்திலிருந்து விடுபடுகிறார்கள்.

மக்களிடையே விநாயக வழிபாடு பெருகிப் பரவியுள்ளது, கணபதியின் உருவத்தைக்கல்லினில்சமைத்து வழிபாடாற்றும் முறைமை பொதுவானது. மண்ணில் பிடித்துவைத்து வணங்குதலும் நெடுங்கால வழக்கமே. அதி காலையில், பசுவின் சாணத்தினைப்பிடித்து வைத்து ஏற்றுதலும் போற்றுதலும் நடைமுறையில் உள்ள ஒன்றாகும். ஆராதனைக்கு வேண்டும் பொழுது அரிசிமாவிலும் மஞ்சளிலும் அவன் உரு அமைத்து அருள்பெறும் முறைமையும் உண்டு. வேறொன்றும் அகப்படாதவிடத்து அறுகம்புல் அவனுக்கு அறிகுறியாக அமையும்.

எக்காரியத்தைத் தொடங்குமுன்னரும் மக்கள் விநாயகனை வணங்குவர், அவனை வேண்டிக்கொள்ளாது ஆற்றுகின்ற வினை விபரீதமா முடியும் என்ற எண்ணம் மக்களிடையே உள்ளத்தில் ஆழப் பதிந்துள்ளது.

**[illegible]**

இவ்வாண்டு நடைபெறும் தீர்த்தத் திருவிழா கோவிலுக்கு அண்மையில் உள்ள திருக்குளத்தில் நடைபெறும். ஆண்டு பலவாக இத்திருக்குளம் தேடுவாரற்ற நிலையில் இருந்தது. அப்பொழுதெல்லாம் தீர்த்தத் திருவிழாவினைக் கோவிற் கிணற்றில் கொண்டாடினார்கள். விநாயகப் பெருமான் அருளால் இரு ஆண்டுகட்கு முன் திருக்குள சீரமைக்கப்பட்டது. சீரமைக்கப்பட்ட திருக்குளத்தில் சென்ற ஆண்டு தீர்த்தத் திருவிழா சிறப்புறக்கொண்டாடப்பட்டது. இவ்வாண்டும் அம்முறை கையாளப்படும். மூஷிகவாகனனை விநாயகப்பெருமான் எழுந்தருளிவருவார். தீர்த்தமாடி அடியார்கள் உள்ளத்தைமகிழ்விப்பார்.

**இளைஞர்களின் பெரும் பணி**

திருக்குளத்தினைப் புதிப்பிப்பதில் இளைஞர்களின் முயற்சி போற்றுதற்குரியது. கிராமத்தின் கண் போன்றது திருக்குளம். நீர் நிலைகள் இல்லாத ஊர்கள் அழகு அற்றதாக இருக்கின்றன. எனவே பாழடைந்த திருக்குளத்தைத் திருத்திப் புதுக்கி அமைக்க வேண்டியிருந்தது. விநாயகப்பெருமான் இளைஞர்களின் உள்ளத்தில் திருக்குளத்தைத் திருத்தியமைக்க வேண்டுமென்ற எண்ணத்தினைத் தந்தார். சுறுசுறுப்பான இளைஞர்கட்கு இந்த எண்ணம் விறுவிறுப்பைத் தந்தது. சிறந்த பணியில் ஈடுபடுகின்றோம் என்ற உணர்வு, மூன்று திங்கள் தொடர்பாக, அலுப்பின்றிச் சலிப்பின்றி ழைக்க உதவியது. உழைப்பு வீண்போகவில்லை. ருந்திய அணைகள் எழுந்தன; பூந்தோட்டம் பொருந்தியதாக அமைந்தது; உடல் வருந்தியதாலும் உள்ளங்கள் மகிழ்ந்தன அல்லவா!

**ஆக்கமும் ஊக்கமும்**

இளைஞர்கள் செய்யமுனைந்தார்கள். எனினும் ஆக்கம் அளித்தவர்களும் ஊக்கம் ஊட்டியவர்களும் பெரியோர்களே. ''இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன் கண்விடல்'' என்ற வள்ளுவரின் வாக்கு நோக்கி, இளைஞர்களின் திண்மையினையும் வன்மையினையும் ஆய்ந்து, ஆக்கம் தந்தவர்களுட் பெரும்பான்மையோர் பெண்களே! அவர்கள் பொருள் கொடுத்து உதவினார்கள். வரம்பின்றி வாரி வழங்கினார்கள். அவர்களின் உள்ளம்; நிறைந்த உள்ளம்; வாழ்விலும் தாழ்விலும் பங்கு கொள்ளும் மனப்பாங்குடன் உதவினார்கள், ஆக்கம் அளவின்றி இருப்பினும் ஊக்கமும் வேண்டுமல்லவா? சார்வு நீக்கி, உணர்வூட்டி, பிழை நீக்கி செயலாற்றும் தன்மையில் வன்மையினைத் தந்தவர்கள் தந்தையர்கள் தாம். கோவிலை நிர்வகிக்கும் செயற் குழுவினரின் குன்றாத ஆர்வம், தெறித வருத நிறைவு, உறுதிதளராத உள்ளம் எத்துக்கொண்டகருமத்தைவெற்றிகரமாக அமைப்பதில் பெரிதும் உதவியது.

**பணியும பயனு**

'என் கடன் பணிசெய்து கிடப்பதே' எனக் கூறி உழவாரப் படைகொண்டு பணிசெய்துபரமபதமடைந்தார் அப்பர் சுவாமிகள். தன்னலமற்ற பொதுப்பணி நம்மை இறைவன் பால் இட்டுச்செல்கின்றது. பணி செய்தவர்கள் பணி செய்ய முயன்றவர்கள், உதவியவர்கள் அனைவரும் விநாயகப்பெருமானின் நல்லருளைப் பெறுவார்கள்.

"பயனைக் கருதியே கருமம் செய்பவனாக இராதே; செயலின்மையில் உனக்குப் பற்றும் ஏற்படவேண்டாம்'' (பகவத்கீதை-2/47) எனக் கிருஷ்ணபகவான் கூறுகின்றார். எனவே தொடர்ந்து நற்பணி செய்தல்வேண்டும். இறைவனின் அருளும் குறையாது கிடைத்துக்கொண்டே இருக்கும்.

'ஐந்து கரத்தனை யானை
முகத்தனை
இந்தின் இளம்பிறைபோலும்
எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக்
கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்
றுகின்றேனே'

# பிறவிஞானி - ஸ்ரீசுவாமி சிதானந்தஜி

– சுவாமி வெங்கடேசானந்தர் –

**1916** ஜூன் 24-ந் திகதி தவசிலர்களாலும் மெய்யடியார்களாலும் என்றுமே நினைவுகூரப்பட வேண்டிய தினமாகும். ஏனென்றால் அன்றுதான் எங்கள் சுவாமி சிதானந்த மகராஜ் திருவவதாரம் செய்தார்.

சுவாமிஜியின் ஜாதகத்தைப்பார்த்தஒருபிரபலசோதிடர்சுவாமிஜி இந்தப் பிறப்பில் மட்டுமல்ல முற்பிறப்பிலும்கூட ஓர் அருள்துறவியாக மிளிர்ந்தார் எனத் தெரிவித்தார். முற்பிறப்பில் மட்டுமென்ன பற்பல ஜென்மங்களில் சுவாமிஜி தவசீலராகத் திகழ்ந்திருத்தல் வேண்டுமென்பதை சுவாமிகளுடன் நெருங்கிப் பழகும் பாக்கியம் செய்தவர்கள் எல்லோரும் அறிவர், அந்தப்பாக்கியம் அடியேனுக்கும் கிட்டியது, அதனால் சுவாமிஜியினுடைய புனித பாதங்களை எனது சிரசின் மீது வைத்து உண்மையாக ஆசிர்வதிக்கப்பட்டதாய் உணர்கிறேன், பலவருடங்களாகச் சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய மதிப்புமிக்க பொன்மொழிகளைச் சுருக்கெழுத்தால் குறித்துப் பின்னர் அவற்றைத் தொகுத்துப் பல நூல்களாக்கினேன்,

எனக்கு கஷ்டம் வரும் போதெல்லாம் சுவாமிகளுடன் மிக்க பணிவுடன் உபதேசம் கேட்கச் செல்வதுண்டு. அப்பொழுது சுவாமிகளுடைய அறிவாற்றலையும் உள்ளத் தெளிவையும் கண்டு வியப்படைவதுண்டு. சுவாமிகள்மனித சமூகத்துக்

(10-ம் பக்கம் பார்க்க)

குறளமுதம்

# வள்ளுவர் போற்றும் மனிதப் பண்பு

உலகில் வாழ்கின்ற மக்கள் பலதிறப்பட்டவராய் அமைந்துள்ளனர், எவர் எப்படி இருந்தாலும் மனிதப்பண்பு உள்ளவர்களே மக்கள் ஆவார் - ஏனையோர் என்புதோல் போர்த்த உடம்பினர்.

உலகில் வாழ்பவர்கள் சிலர் கருத்துத் தடுமாறி மொட்டை அடித்தும், தாடி வளர்த்தும், உருத்திராக்க மாலை அணிந்தும், காந்தித் தொப்பி அணிந்தும் வெளி வேடத்தில் புற அலங்காரத்தில் ஈடுபடுகின்றனர். உள்ளத்தின் பண்பை மறந்து விடுகின்றனர்,. பலர் இவற்றை வெறும் ஏமாற்றாகவே செய்கின்றனர்.

''மழித்தலும் நீட்டலும்
வேண்டா வுலகம் பழித்
தது ஒழித்துவிடின்''

என்று வள்ளுவர் இவர்களுக்குப் புத்திமதி சொல்கிறார், இழுக்கானது என்று உலகம் ஒதுக்கி வைத்தவற்றைச் செய்யாதுவிட்டாற் போதும் எஃபது அவர் கருத்து.

உலகத்தில் உள்ளவர்கள் எல்லாரும் எவ்வளவு கற்றாலும் கற்றபடி ஒழுகாதவர் பலர், எனவேதான் இதை யுணர்ந்து வள்ளுவர்,

'கற்க கசடற கற்பவை
கற்றபின் நிற்க அதற்குத்
தக''

என்று கூறினார். இந்த நிலையை மேலும் உணர்த்தும் வேறு குறட்பாக்களும் உள,

'அரம்போலக் கூர்மைய
ரேனும் மரம்போலவர்
மக்கட் பண்பிலா தவர்'

என்று எவ்வளவு கூரிய அறிவு இருந்தாலும் பண்பில்லாதவர் மனிதரல்லர் என்று வலியுறுத்துகின்றார்,

''நுண்ணிய நூல்பல கற்
பினும் மற்றுந்தன்
உண்மை அறிவே மிகும்'

என்ற குறளில், எவ்வளவு நூல்களைக் கற்றாலும் ஒருவனுக்கு இயல்பாகவே உள்ள பண்புதான் தலைதூக்கும் என்று வலியுறுத்துகின்றார். பண்புள்ள மனிதர்களால்தான் உலகம் உய்ய முடியும் என்று அவர் நம்பினார். படிக்கப்படிக்க இன்பம்தரும் நூல்போலப் பழகப் பழக இன்பம்தரும் தன்மையின் பண்பாளர்.

''பண்புடையார்ப் பட்
டுண்டு உலகம் அஃதின்
றேல் மண்புக்கு மாய்வது
மன்''

''நவில் தொறும் நூல்
நயம் போலும் பயில்
தொறும் பண்புடையா
ளர் தொடர்பு''.

வள்ளுவர் கையாண்ட உவமைகளில் மிக அழகான உவமை நயமும், உயர்ந்த கருத்தும் கொண்ட குறளில் மக்களுக்கும் கயவர்க்கும் வேற்றுமை காண்பது அரிது என்று கூறுகிறார் வள்ளுவர், கயவரும் மக்களை ஒத்திருப்பதைப் போல வேறு எந்த இருவகைப் பொருள்களிடத்திலும் ஒப்புமை இல்லை என்று கூறுகின்றார்,

''மக்களே போல்வர் கய
வர் அவரன்ன ஒப்பாரி
யாங்கண்டது இல்''

இதனால் வெளித்தோற்றத்தில் நம்பிவிடக்கூடாது. உலகில் பலவகை மனிதர் உளர் என்று எச்சரிக்கின்றார். மேலும்,

''கணைகொடிது யாழ்
கோடு செவ்விது ஆங்
கன்ன வினைபடு பாலால்
கொளல்''

என்று விளக்கம் தருகிறார். நேரானதாயினும் அம்பு கொடியது. வளைந்தாலும் யாழ் இனியது. நல்லது கெட்டதை அவற்றின் தன்மையால் அறியவேண்டும் என்பது அவர் கருத்து.

மனிதப்பிறவி வேறு. மனித வாழ்வு வேறு - கல்விவேறு- பயனுறு பண்புவேறு- புறத்தன்மை ஒன்று-உள்ளீட்டில் இன்னொன்று - எனவே இவற்றை உலக வாழ்வில் எடைபோட்டு-பண்பாய்ந்து வாழ வேண்டியது அறிவுடையோர் கடமை- அதுவே மனிதப் பண்பையும் வளர்க்கும்.

## துப்பாக்கியின் விலை ரூ. 47,000

அதிபர் கென்னடியைக் கொல்ல ஆஸ்வால்டு பயன்படுத்திய துப்பாக்கிக்கும், டல்லாஸ் பொலிஸ்காரரைக் கொன்ற கைத்துப்பாக்கிக்கும் சுமார் 47,619 ரூபாயை விலையாகத் தருவதற்கு, அரும்பொருட் சேகரம்செய்யும் ஒருவர் முன்வந்துள்ளதாக அமெரிக்க நீதித்துறை அதிகாரி ஒருவர் கூறினார்.

ஆனால் அவை இரண்டும் சுமார் ரூ. 60-க்கு வாங்கப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது. மேற் கூறிய பணம் ஆஸ்வால்டின் மனைவிக்குக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# உள்ளிருள் நீக்கும் ஒளிவிளக்கு

—(செல்வி நா. பாக்கியம்)—

அறத்தைத் தகளியாகவும், ஆன்ற பொருளைத் திரியாகவும், இன்பத்தைச் சிறந்த நெய்யாகவும் கொண்டு வள்ளுவனார் வையத்து வாழ்வார்கள் உள்ளிருள் நீக்கும் விளக்கு ஒன்றினை ஏற்றி வைத்தார். இந்த விளக்குக் குறும்பாவாலாகிய விளக்கு. ஆயிரத்து முந்நூற்று முப்பது குறள்களைக்கொண்ட இந்த விளக்கு ஒரு சாகியத்தினருக்கோ இன்றேல் ஒரு சமயத்தினருக்கோ மட்டும் உள்ளிருளை நீக்காது, உலக மக்களனைவரினதும் உள்ளிருளை நீக்குகின்றது. எனவே இதன் மகிமையை நாம் சற்றே ஊன்றிச் சிந்திக்க வேண்டும்.

இந்த அக விளக்காகிய திருக்குறள் ஒரு தமிழ் மறை. இதிற் கூறப்பட்ட அறங்கள் யாவும் ஒருவன் தன் வாழ்க்கையிற் கடைப்பிடிக்கக்கூடியவை. ஏன்? கடைப் பிடிக்கவேண்டியவை. சைவசமய நூல்கள் கூறும் பஞ்சமாபாதகங்களை எவ்வாறு ஒதுக்கி வாழலாம் என்பதை வாழ்ந்து அநுபவப்பட்டபின் விரித்துரைக்கின்றார் திருவள்ளுவர் எனவே இது ஒரு வாழ்க்கை நூல். அதாவது ஒரு மனிதனை வையத்து வாழ்வாங்கு வாழச் செய்யும் நூல்.

இப்பூமியில் வந்தெய்திய உயிரினங்கள்யாவும் தாம் தாம்செய்துகொண்டகர்மங்களைத்தொலைப்பதற்காகத் தான் வந்தன. இந்தப்பூமி நல்லதொரு வைத்தியசாலை. சிவனாகிய வைத்தியனிருந்து ஆன்மாக்களுக்குப் பரிகாரம் செய்யுமிடம். இதனையே மணிவாசகப் பெருமானும் ''புவனியிற் போய்ப்பிறவாமையில் நாள் நாம் போக்குகின்றோம் அவமே இந்தப் பூமி சிவனுய்யக் கொள்கின்றஆறு'' என்று கூறிவைக்கின்றார். தாம் கூறியதாகக் கூறவில்லை. அயனும், மாலும் ஆசைப்பட்டுக் கூறுவதாகக் கூறிவைக்கின்றார். இந்தக் கருத்தைத்தான் திருவள்ளுவரும் கூறுகின்றார். இறைவனுடைய அடியைச்சேராதவர்கள் பிறவிப் பெருங்கடலை நீந்தமாட்டார்கள், சேர்ந்தவர்கள் நீந்துவார்கள் என்று.

''பிறவிப்பெருங்கடல் நீந்
துவர் நீந்தார்
இறைவன் அடி சேரா
தார்''

என்பது அது.

இது அவர் தம் கடவுள் வாழ்த்திற் கூறும் விஷயமாகும். கடவுள் வாழ்த்து அவரியற்றிய நூலின் முதலாம் அதிகாரம். இறைவனடியைச்சேர்வதுதான் ஒரு பிறப்பின் நோக்கம். அதற்கு உபகாரஞ் செய்யக் கூடிய அறங்கள் பலவற்றைப்பற்றி அவர் பின்னே கூறுகின்றார்.

புற இருளை விளக்கின் ஒளி நீக்கிவிடுவதுபோல நமது அக இருளை நீக்குவதற்கு ஒரு கருவி இருக்கிறது' அதுதான் பஞ்சமாபாதகங்களை ஒதுக்கி வாழும் வாழ்வு. எனவே அதனிற் றலையாயதாகியகொலையைப் பற்றித் திருவள்ளுவர் கூறும் பொழுது ''ஒன்றாக நல்லது கொல்லாமை'' என்று கூறுகின்றார். ஒன்றாக நல்லதென்றால் முதன்மையாக வைத்தெண்ணப் படுவது என்பதாகும். இந்தக் கொலைக்கு அடுத்தபடியான பாதகம் களவாகும். களவைப்பற்றிக் கூறும்பொழுது ''களவினலாகிய ஆக்கம் அளவிறந்தாவது போலக் கெடும்'' என்கின்றார் அவர். அதாவது களவினால் வரும் செல்வம் அளவிறந்து பெருகுவதுபோலத் தோன்றிப் பின் இருந்த இடமே தெரியாது அழிந்து போய்விடும். இந்தக்களவு ஒருவனுடைய உயிர் நிலையாகிய உடலைக்கூடத் தவறச்செய்யும் என்ற கருத்தோடு ''கள்வார்க்குத் தள்ளும் உயிர் நிலை'' என அவர் கூறுகின்றார். அடுத்துக் கள் என்னும் விஷயத்தைப் பற்றிச் சிந்திப்போமானால்;

''உள்ளற்க கள்ளை உணி
லுண்க சான்றோரால்
எண்ணப்பட வேண்டா
தார்''

என்றே அவர் கூறிவைத்து விட்டார். தயவு செய்து கள்ளை உண்ணாதீர்கள். அப்படி உண்ணுவதாயின் சான்றோரால் மதிக்கத் தேவையில்லாதவர்கள் 'உண்ணுங்கள்' என்பதுதான் அவர் கருத்தாகும். சான்றோரால் எண்ணமுடியாதவன்வையத்துள் வாழ்ந்தும் இறந்தவனுக்குச் சமமாவான். எனவே கள்ளை உண்ணாதீர்கள் என்றே அவர் வற்புறுத்துகின்றார். அடுத்த பாதகமாகிய காமத்தைப்பற்றிக் கூறும்பொழுது காம மயக்கத்தால் நெறி தவறிப் பிறனில் விழைகின்ற ஒருவன் பகை, பாவம், அச்சம், பழி என்னும் நான்கிலிருந்தும் ஒருநாளும் மீள முடியாதுஎன்கிறார்.

''பகை பாவம் அச்சம்
பழியென நான்கும்
இகவாவாம் இல்லிறப்
பான் கண்''

அது மாத்திரமல்ல, ஒருவன் வேறு எந்த அறத்தைச் செய்யாது விடினும் பிறனில் விழையாமை ஒன்றையே செய்தாற்போதும் எனவும் அவர் கூறுகின்றார்,

''அறன்வரையா னல்ல
செயினும் பிறன்வரை
யாள்
பெண்மை நயவாமை
நன்று''

அடுத்துக் குரு நிந்தையைப்பற்றித் திருவள்ளுவர் குறிப்பாகக் கூறு விடினும் பெரியாரைத் துணைக்கோடல் என்னும் அதிகாரத்துள்

''அரியவற்று ளெல்லாம்
அரிதே பெரியாரைப்
பேணித் தமாரக்கொளல்''

என்று கூறுகின்றார். நாம் அருமையான காரியமெனச் சிந்திப்பனயாவற்றுள்ளும் அருமையான காரியம் என்னவென்றால், பெரியவர்களைப் பேணுதலும், அவர்களைத் தமராகக்கொள்ளுதலுமாகும்.

இங்ஙனம் வள்ளுவரது வாழ்க்கை விளக்குப் பல அறங்களைக் கூறுகின்றது. அதனைப் பல கோணங்களில் நின்று பலபடச் சிந்திக்கலாம், சொல்லலாம், இவற்றைப்பற்றி நாமறிந்து, வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும்தெய்வத்தையடைய முயலுவோமாக.

## திடீர் முட்டை!

சாதாரண உணவுகளைப் பெருமளவில் மாற்ற முடியும். வாஷிங்டன் நகரில் உள்ள விவசாய ஆராய்ச்சிக்கழகத்திடம் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஓர் அறிக்கையின்படி, விலங்குகளின் வளர்ச்சியை ஒழுங்குபடுத்தும் ரசாயனப்பொருள்கள் பற்றி ரசாயன நிபுணர்கள் ஆராய்ந்து வருகிறார்கள்.

ஜந்துக்கள் தீங்கு செய்ய முடியாதபடியும் உணவுண்ணாமலிருக்குமாறும் வைத்திருக்கக் கூடிய ரசாயனப் பொருள்களை அவர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

குடியானவன் தான் விரும்பும்போது தன் கோழிகள் முட்டையிடுமாறு செய்வதற்குப் பயன்படுத்தக்கூடிய ரசாயனப் பொருள்களும் விரைவில் புழக்கத்துக்கு வரக்கூடும். குடியானவன் தனது பசு பால் உற்பத்தி செய்வதைக் கட்டுப்படுத்தக் கூடியகாலமும் வரலாம். இறைச்சிக்காகப் பயன்படும் விலங்குகள் தேவையான அளவு, தேவையான விதத்தில் இறைச்சி தரும் விதத்தில் அவற்றை வளர்க்க முடியும்.

உணவுப் பிரச்னை மிகப் பழமையானது; உணவைப் பக்குவப்படுத்தும் பழைய முறைகளை விருத்தி செய்தும், புதிய முறைகளை உருவாக்கியும் பிரச்னையைச் சமாளிக்க விஞ்ஞானிகள் முயன்று வருகிறார்கள். அவர்களது வெற்றி, விரைவாக வளர்ந்து வரும் உலகுக்குப் பெரும் நன்மையாக விளங்கும்.

## ஏட்டின் எழுச்சி

— ஜீவா நாவுக்கரசன் —

உறுதுயர் நீக்கி
உண்மையை காக்க
நன்றே உழைத்திடுவோம் — அன்பில்
இன்றே திளைத்திடுவோம் — எங்கள
மறை மொழி பேணியே
நிறைமொழி மாதராய்
நிற்பவர் செல்வரடி —தமிழ்
கற்பவர் நல்லரடி

மங்கையர்க் கேயிதைச்
சொல்லிவி ட்டாலிந்த
மண்ணினைக் காத்திடுவார் — தம்
கண்ணெனப் பார்த்திடுவார் —இவர்
கற்பும் பொறுமையும்
பொற்குணப் பண்பையும்
தாங்கியே வாழ்ந்திடுவார் — நலம்
வாங்கியே ஆழ்ந்திடுவார்

நாட்டு வளத்தினை
கூட்டிப் பெருக்கிட
நற்பணி செய்திடுவார் — சொன்ன
சொற்படி உய்திடுவார் — புகழ்
மேட்டிலே மேவிநல்
ஏட்டில் எழுச்சியாய்
என்றும் நிறைந்திடுவார் — நல்லோர்
நன்றே உரைத்திடுவார்

வாழ்க்கையை சேவையாய்
ஆக்கிய மாந்தர்கள்
எதையும் ஏற்றிடுவார் — வீர
இதயம் போற்றிடுவார் — நம்மில்
'நேற்று இருந்தவர்
இன்று இல்லை' யெனும்
நீதி அறிந்திடுவோம் — எம்மில்
சாதி மறந்திடுவோம்

# இலங்கையில் ஒலிபரப்பு சேவை

— வீ. என். பீ. —

**1941**-ம் ஆண்டு ஐப்பசி மாதத்தில் ஒருநாள் 'இது கொழும்பு ரேடியோ நிலையம்' என்று வானொலியில் பேசுபவரைப் பார்க்க சென்றேன். அலறைக்குஅவருக்கு ஒரு சங்கடமான நிலைமை ஏற்பட்டுவிட்டது. 'நாட்டு வளப்பம்' என்ற நிகழ்ச்சியில் அவரோடு சேர்ந்து உரையாடுபவர் வந்துசேர வில்லை. நிகழ்ச்சிக்கு நேரமாகிவிட்டது. சடுதியாக என் பக்கம் திரும்பி 'நீ பாடுவாயல்லவா?' என்று கேட்டார். நான் 'ஓம்' என்றேன். விறுவிறென்று என்னை இழுத்துக்கொண்டு ஸ்டுடியோவுக்குள் நுழைந்தார்.

இருவரும் மைக்ரோபோனுக்கு முன்னால் உட்கார்ந்தோம். அவர் தலையில் ஹெட்போனை மாட்டிக்கொண்டு ஒரு ஸ்விச்சைத் தட்டிவிட்டு 'இதுகொழும்பு றேடியோ நிலையம்' இப்பொழுது நாட்டு வளப்பம்' என்றார்.

நான் 'ஓம்' என்றேன்.

அவர் என்னை முறைத்துப் பார்த்து 'சத்தம் போடாதே' என்று சமிக்ஞை செய்தார். பிறகு, 'என்ன தம்பி, இண்டைக்கு உன்ரை மாமா வரேல்லையோ' என்றார்.

நான் மௌனம் சாதித்தேன்.

அவர் மறுபடியும் என்னை முறைத்துக்கொண்டுகையை மேலும் கீழும் ஆட்டினார்.

சில விநாடிகள் செல்ல என்னையும் சம்பாஷணையில் சேர்ந்து கொள்ளும்படி அழைக்கிறார் என்ற எண்ணம் மனத்தில் உதித்தது. நான் 'ஓம்' என்றேன்.

பிறகு பின்வரும் ருசியான உரையாடல் எங்களுக்குள் நிகழ்ந்தது.

அவர்: 'சண்டை புதினங்கள் என்னெண்டு கேட்க வந்திருக்கிறயாக்கும்.'

நான்: ஓம்.

அவர்: யுத்த முனையிலை பிரிட்டிஷ் துருப்புகள் வெற்றிகரமாக பின்வாங்குகின்றன. ஜேர்மன் விமானங்கள் நேற்றிரவும் லண்டன் நகரத்துசகுமேலே 4000 ரூத்தல் குண்டுகளை வீசினவாம்.

நான்: ஓம்.

அவர்: நாளைக்கு கட்டாயம் உன்ரை மாமாவைவரச் சொல்லு, என்ன!

நான்: ஓம்.

அவர்: நீ நல்லாய் பாடுவாய் எண்டு கேள்விப்பட்டன். எங்கை ஒரு பாட்டு பாடு பாப்பம்.

என்று சொல்லி தாம் எழுதிய ஒரு பாட்டை என்னிடம் நீட்டினார். நான் அதைப் பாடி முடித்தேன். 'நாட்டு வளப்பம் நிகழ்ச்சியும்முடிந்தது.

இலங்கை வானொலியின் குழந்தை பராயத்தில் இப்படித்தான் பல 'கலாதிகள்' நடைபெற்றன.

அன்று 'இது கொழும்பு றேடியோ நிலையம்' என்று பேசிய அறிவிப்பாளர் வித்தியாரத்தினம் நவாலியூர் சோ. நடராஜன் அவர்கள். அவர் ஒருவர்தான் அப்பொழுது தமிழ் 'அனௌன்ஸர்.' அவர் அப்பொழுது மொழிபெயர்த்துக் கொண்டிருந்த தாகூரின் 'கீதாஞ்சலி'யிலுள்ள 'அந்தமில் வாழ்வெனக் கருளினை, என்ற பாட்டுத்தான் நான் பாடியது. அன்று தான் எனக்கு முதன்முதலாக வானொலியில் பேசி, பாடும் அனுபவம் கிடைத்தது. அதுவே எனுடைய வானொலி பரீட்சையும் (ஒடிஷன்) ஆகும்! அது நாள் முதல் நான்வானொலிப்பாடகனாகி விட்டேன்!

ஒலிபரப்பு பகுதி அப்பொழுது தபால்-தந்தி பகுதியின் ஒருபிரிவாய் இருந்தது. போஸ்ட் மாஸ்டர் ஜெனரலே அதன் தலைவர். அவருக்கு கீழ் ஓர் ஒலிபரப்பு சுப்பிறீன்டன். தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் ஒவ்வொரு அறிவிப்பாளர். இப்பொழுது இலங்கை வானொலி இருக்கும் அதே இடத்தில்தான். முந்தியஒலிபரப்பு நிலையமும் இருந்தது. ஜப்பான் யுத்தத்தில் இறங்கியவுடனே ஹவ்லொக் குதிரைப்பந்தயத்திடலிலும் சுதந்திர சதுக்கத்திலும் ஒரு பிரமாண்டமான இராணுவ விமானத்தளம் அமைக்கப்பட்டது. ஒலிபரப்பு நிலையம் பொரளையில் கொட்டா ரோட்டிலுள்ள ஒருவீட்டுக்கு மாற்றப்பட்டது. யுத்தம் முடிந்த பிறகு அது முன் இருந்தஇடத்திலேயே புதிய வானொலி நிலையம் அமைக்கப்பட்டது.

ஒரே ஒரு ஸ்டுடியோதான் அப்பொழுது இருந்தது. அதில் அறிவிப்பாளருக்கு ஒரு மைக்: பாடுபவர் அல்லது பேசுபவருக்கு ஒரு மைக், மத்தியானம் 12மணி முதல் 12-20 வரை இசைத் தட்டு சங்கீதம் ஒலிபரப்பப்படும். அதைத் தொடர்ந்து 12-30 வரை செய்திகள் வாசிக்கப்படும். மாலையில் 6 மணி தொடக்கம் 6-45 வரை மறுபடியும் இசைத் தட்டு சங்கீதம். 6.45 இலிருந்து 7 மணிவரை செய்திகள். இவ்வளவுதான் தமிழ் நிகழ்ச்சிகள்!

இசைத்தட்டுகளின் உதவியைக் கொண்டு சங்கீதத்தையும், பத்திரிகைகளின் உதவியைக் கொண்டு செய்திகளையும் ஒலிபரப்பி அறிவிப்பாளர் தமது கடமையை முடித்துவிடுவார். சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் மட்டும் மாலை வேளைகளில் வெளிக் கச்சேரிகள் நடைபெறும்-அதாவது நிலையத்துக்கு வெளியேயிருந்து யாராவது ஒரு கலைஞர்வந்து கச்சேரி செய்வார்.

ஒரே மீட்டர் வரிசையில் தான் ஆங்கில, சிங்கள, தமிழ் நிகழ்ச்சிகள் மூன்றும் ஒலிபரப்பப்பட்டன. சில அறிவிப்பாளர் தமது கடமைகளை முடித்துக் கொண்டு தமது ஆசனத்தையும் மைக்கையும் காலி பண்ணினவுடனே சிங்கள அறிவிப்பாளரோ தமிழ்அறிவிப்பாளரோ தமது கடவையை ஆரம்பிப்பார். இந்த சமயங்களில் பலவிதப்பட்ட மோதல்கள் ஏற்படும்.

(தொடரும்)

## வானத்தாமரை (8ம் பக்கத் தொடர்ச்சி)

டாலும், ஆண்டவனிலுள்ள நம்பிக்கையைக் கைவிடாத காரணத்தால் துன்பத்தின் அடியில் துடி துடிப்பதிலிருந்து தப்பித்துக்கொள்ளமுடிந்தது. தெளிவற்றகுழப்பம் நிறைந்த எண்ணங்கள் அவன் இதயத்தைத் தாக்கியபோது, அந்த இதயம் அவனைத் துடி துடிக்க விரட்டியபோது, இறைவனின் அருட்பார்வையில் அடைக்கலம் புகுந்தான். உலகம் ஏற்படுத்திய வெப்பாக்கினியைத் தணிப்பது அது ஒன்றுதான் என்பதை உணர அவனுக்கு வெகுகாலம் பிடிக்கவில்லை.

அவனுக்கு அருகில் முருகையா என்பவர் அமர்ந்திருந்தார்; அவர் யாழ்ப்பாணத்தைச்சேர்ந்தவர். அவர் பெரும் முருகபக்தர் என்பதற்கு அவரின் வெண்ணீற்றுப் பூச்சும், காவி அங்கவஸ்திரமும் மட்டுமல்லசான்றுகள். நிமிடத்துக்கு நிமிடம் முருகன் பெருமை கூறிக்கூறி உருகிய அவர் வாய், அருகிலுள்ளவர்களுக்கு முருகன் தீரச்செயல்களைத் தம்பட்டம் அடித்துக் கொண்டிருந்ததில்தன்முருக பக்தியை நிரூபித்துக்கொண்டிருந்தது. அவர் சொன்ன சூரபதுமன் கதை முதற்கொண்டு 'வள்ளிதிருமணம்' வரை பழைய கதைகளாயிருந்தாலும் சிவலிங்கத்திற்கு கேட்பதற்கு ஆறுதலாக இருந்தது.

''தம்பி அதோ பாரும், அதுதான் கதிரமலை.'' அவர் காட்டிய திசையில் சிவலிங்கம் திரும்பிப்பார்த்தான். அடுக்கடுக்காகத் தெரிந்த மலைகளில் அவன் எதை எடுப்பது? அவரோதொடர்ந்தார்: ''பக்தர்கள் அங்கே சாரிசாரியாகப் போவார்கள். அந்த மலையில் ஏறி இறங்குவதிலுள்ள மகிழ்வே தனி.'' அவன் ஆமோதிப்பதுபோற் சிரித்தான்.

(தொடரும்)

## றுங்கை (9-ம் பக்கத் தொடர்ச்சி)

அம்மா... அம்மா... நான்... சாப்பிடவாறன் வாவன்...''

''......''

''புறகும் பாரன் இப்ப புறகும் அழுகிரு— அழாதை...''

கண்களில்பொங்கி வெடிக்கும் கண்ணீரை தனது இரு கைகளாலும் துடைத்து வழித்துவிட்டு, கையைப் பிடித்து இழுத்தாள் புனிதம்...

தாய்மை உணர்வில் செல்வியின் இதயம்விரிந்தது. புன்னகை, மல்லிகை மொட்டு விரிவதுபோல மலர்ந்து உதிர்ந்து விழுந்தது. கைகள் இரண்டாலும் அவளைக் கட்டிப்பிடித்துத் தூக்கி தனது இதழ்களின் ஓரத்தை பதிக்க வேண்டும் எனதுடித்து நின்றது உள்மனது.

(யாவும் கற்பனை)


"லேடன்" LEYDEN

தயாரிப்புகள்:-

● பெனியன்கள்
● ஸ்போட் சேட்டுகள்
● ரீ சேட்டுகள்
● கால் மேசுகள்
(Nylon & Cotton)

லேடன் இன்டஸ்ரீஸ் லிமிட்

7, ஆஸ்பத்திரி :: யாழ்ப்பாணம்



விவேகமுள்ள தாய்மார்,
தங்கள் குழந்தைகளின் சுகவளர்ச்சிக்கு
ஒஸ்டர்மில்க்கையே நம்புகிறார்கள்.

தாய் பால் ஊட்ட முடியாத தருணங்களிலோ அல்லது தாய்பால் போதாமறபோகும் வேளைகளிலோ நீங்கள் ஒஸ்டர்மில்க்கை பரிபூரணமாக நம்பமுடியும்.

தூய்மை மாறாத்தன்மையுடைய ஒஸ்டர்மில்க், ஆரோக்கியமளிக்கும் ஓர் பால் ஆகாரம். பச்சிளங் குழந்தையின் மென்மையான வயிற்றுக்கு பாது காப்பானது. இரும்புச்சத்தும், விட்டமின் Dயும் உள்ளிட்டு அமைக்கப்பட்ட ஒஸ்டர்மில்க், குழந்தையை திடகாத்திரமாகவும், ஆரோக்கியமாகவும், வளரச்செய்கிறது.

நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமாக குழந்தைகள் வளர்ந்து திகழ ஒஸ்டர்மில்க்.




ஒஸ்டர்மில்க்

190/65

## ஞாயிறு கதை மலர்

# பசியும் பாசமும்

**ஒவ்வொரு மனிதனுக்கும் ஒவ்வொரு குறை! பணம் இருந்தால் அவனுக்குப் பிள்ளையில்லை; பிள்ளை இருந்தால் பணமில்லை. இரண்டும் இருந்தால் நிம்மதியில்லை. இன்பம் என்பது கனவுப் பொருளா? மனிதனுகப் பிறப்பதே பிறவியில் முழுமை பெறுவதற்குத்தானே?**

சீதையாச்சி அப்பம் சுடுவதற்கு எழுந்து விட்டாள். "களு...களு...களு..." தேங்காய் துருவும் சத்தம் கேட்கிறது. "எடி பிள்ளை எழும்பனடி விடிஞ்சு போச்சு... இந்தப் பாலைப் பிழிஞ்சுதாவன்"

"என்னணை, விடியமுந்தி எழுப்பிறு... இப்பவே சுட்டு வைச்சா என்னத்துக்கு—காஞ்சுவிறைச்சல்லேபோம்; பேசாமைக்கிட..."

செல்லி மறுபுறம் திரும்பிப்படுக்கிருள்.

"கண்ணைத்துறந்து பார்...பலார்... பத்து விடிஞ்சு விட்டுது, நீ கிடந்த கிடையாக் கிடக்கிருய்..."

பகல் முழுவதும் வேலை செய்த அலுப்பு; உடனே எழுந்திருக்கமுடியவில்லை. கால்கைகளை நீட்டி முடக்கி உடலை உலுப்பி எழுந்துவிட முயல்கிருள். உடலின் அசதியை பார்த்துக்கொண்டு வாளாவிருந்து விட அவளென்ன குபேரன் வீட்டுப் பிள்ளையா...?

செல்லி எழுந்து பாலைப் பிழிந்து கொடுக்கிருள். சீதையாச்சி..!

குக்குடுகிழவி... பார்ப்பதற்கு அழகுமில்லை. பொக்கு வாய்...! சதா எதையோ வாய்க்குள் போட்டுக் குதப்புவதுபோன்று அலகுகள் ஆடுகின்றன. சீதையின் மலர்ச்சி கருகி உடல் சுருங்கி இளமை தளர்ந்து முதுமையின் போர்வையினுள் மறையத்துடிக்கும் அவளின் உடல்... நரம்புகள் தோற்புரையில் விம்மிப் புடைத்து, தோல் சுருக்கங் களின் மகிழ்வில் திளைக்கின்றன...

சீதையாச்சி அகப்பையில் மாவை எடுக்கிருள். கை. காற்றில் தென்னங் கீற்ருகி நடுங்குகிறது. நிதானம் தவருது சட்டிக்குள் போய் விழுந்து எண்ணையுடன் சேருகையில் சிலீரிடுகிறது. பாலில் இரண்டு மேசைக் கரண்டி அள்ளிவிட்டு பொக்குவாயால் அடுப்பை ஊதுகையில் காற்று தணலில் பட்டும் படாமலும் போகிறது. தணல் இளம் குமரிப்பெண்கள் குலுங்கிச் சிரிப்பது போல் ஒருமுறைசிரிக்கிறது, புகை அலைகள் முகத்தில் படர்வதால் கரிப்புத் தாங்க முடியாமல் கண்களிலிருந்து கண்ணீர் கசிகிறது. கண்கசக்கியபடி மறுகையால் கடகத்தில் இருந்த ஓலைக்கீற்றுகளில் நான்கு மூன்றை எடுத்து தணலில் புதைக்கிருள். அது பற்றி எரிகிறது. அதன் வேகத்தைப்போலமனதில் கவலைச் சுவாலை நாக்குகளை நீட்டுகிறது.

கவலை... புகைஅலைபோல் எழுந்தலைகிறது..!

என்ன ஜென்மமிது. மனிதனுகப் பிறப்பதுகூட ஒரு குறையா...? பாவம் அவள் செல்விக்குச் சதா பிள்ளைகளைப்பற்றிய நினைவுதான்... என்னசெய்வது... அன்புக்கு அவள் நெஞ்சம் அடிமையாய் அலைகிறது. அதற்கிடையில் நான் இருக்கிறேன் எனத்துன்பம் தலைகாட்டுகிறதே...!

### 'மலையாள்'

ஒவ்வொரு மனிதனுக்கும் ஒவ்வொருகுறை... பணம் இருந்தால் பிள்ளையில்லை. பிள்ளையிருந்தால் பணமில்லை. இரண்டுமிருந்தால் நிம்மதியில்லை... இன்பமென்பது கனவுப்பொருளா..? மனிதனுகப் பிறப்பதே பிறவியில் முழுமை பெறுவதற்குத்தானே..! என்னமோ நான் இருப்பது அவளுக்கு ஆறுதல்... வேலை செய்து கஷ்டப்படும் செல்விக்கு உதவி. நான் என்ன செய்ய... பத்து வயது துவக்கம் இன்டை வரை அடிச்சுக் கொடுக்க வேண்டியிருக்கு, மனசார அவள்தான் என்ன செய்வாள்? மூண்டுபிள்ளையளும் அவரும் பாரமாய் இருக்கும்போது... சும்மா காலைக்கையை ஆட்டி வேலை செய்யாமல் இருந்துவிடமுடியுமோ... நம்மடை காலகஷ்டம் அவரையும் இப்பிடி ஆக்கிப்போட்டுது. மனிசனுக்கு மனசார ஏலாது. தன்னுலை ஏலுறதை அது செய்யுது... நாமென்ன மற்றவர்களிட்டே 'அதில்லை இதில்லை' எண்டு கேக்கிறேமா...! கேட்டாலும் நமக்கு இட்டல் இடஞ்சல் அஞ்சுபத்து இந்தா எண்டு தருகினமா... எங்களையாரும் விரல் மடிக்க ஏலாது– இல்லை... மானத்தை வித்து சீவிக்கிறமா... எல்லாம் இந்த உடல் இருக்குமட்டும் பாடு படுறம். உடலைக்கயிருக்கி திரிச்சு சத்தியைப் பெறுகிறம். பின்னை ஏன் நாமள் மற்றவங்களுக்கு

(9-ம் பக்கம் பார்க்க)

---

இலக்கிய ஓவியம்

# 'குறட்பாவை'

மயக்கும் மாலை நேரம். மழை மேகம் கூடி நின்ற கோலமும், மலர் மணத்துடன் வந்த மந்தமாருத தென்றலும் நெஞ்சை மகிழ்ச்சிக் கடலில் மூழ்கச் செய்தன. மலர் நிறைந்த அச்சோலையின் கண் மான் கூட்டம் மயங்கித்திரிந்தன. மயில்கூட்டம் தோகைவிரித்தாட முனைந்தன.

குளிர்தாங்க வொண்ணுமல் கிளியும், குயிலும் பேசாநின்று சிறகணைத்திருந்தன. சோலையெங்கும் மல்லியும், பிச்சியும், சண்பகமும், செவ்வந்தியும் தன் மணம் பரப்பிநின்றன.

சண்பக மர மருங்கே நெளிந்து வளைந்து சென்றது ஓர் சிற்றோடை. ஓடையில் செல்லும் நீரினை மறைத்து, சண்பகமலர் நதியோ என ஐயுறும் வண்ணம் மரத்தினின்றும் உதிர்ந்த மலர்கள் மேகக் கூட்டம் போல மெதுவாக அசைந்து நகர்ந்து கொண்டிருந்தன.

பாறையில் அமர்ந்திருந்த ஆதிவல்லி தன் இளநுங்கு நிகர் ராடியில் இடக்கை ஊன்றி, நீரில் கால்களை விட்டு அளைந்துகொண்டிருந்தாள். தன் சங்கால்களைத் தொட்டு முத்தமிட்டு செல்லும் செண்பகமலரினை உற்று நோக்கிக் கொண்டிருந்தாள் அவள். ஆனால் அவள் சிந்தனையோ—?

அருகிருந்த மற்றொரு பாறையில் அமர்ந்திருந்த 'மஞ்சரி' தன் மடியில் கிடந்த துளசியினை மாலையெனத் தொடுத்துக்கொண்டும், ஆதிவல்லியை அடிக்கொருமுறை பார்த்தவாறும் இருந்தாள்.

இனிய குழல் இசை ஆதிவல்லியின் காதுகளூடே பாய்ந்துசென்றது. அவளது கண் இமைகள் ஒன்றையொன்று தழுவிக்கொண்டன. முகம் பொலிவு கண்டது. இசையில்மெய்மறந்து கண்மூடி ரசித்துக்கொண்டிருந்தாள்.

"ஏனடி என்ன அப்படிச் சிலையாயிருக்கிருய்?" என்ற மஞ்சரி தனக்குள் சிரித்துக் கொண்டாள்.

'கொஞ்சம் சும்மாயிரு. அதோ தேவகானம் பொழிகிறது. உனக்கு அது கேட்கவில்லை...? என் கண்ணன் எனக்காக 'ஹிந்தோள' ராகம் இசைக்கிருன்...!'— ஆவேசத்துடன் சொன்னுள் ஆதிவல்லி!

'ஆதிவல்லி, எதையாவது புலம்பாதே! அதுதான் இவ்வளவு நேரம் சிந்தித்துக் கொண்டிருந்தாயா? அந்தப் பரந்தாமன் இப்போது எங்கே போயிருக்கிருரோ? நீ அவரையே நினைத்திருப்பதால் அவரது குழல்இசை உன் காதுகளில் ரீங்காரம் செய்கிறதே தவிர வேறொன்றுமில்லை. நீ நினைப்பது வெறும் பிரமை!'- முத்து தெறித்தாற் போல சிரித்தாள் மஞ்சரி.

ஆதிவல்லி தன் மயக்கம் தெளிந்தாள். காதினில் தன் காந்தள் மென் விரலால் மேலும் இசை கேட்கிறதா என பரீட்சித்துக் கொண்டாள். தன் மனநிலை-பிரமையென்பது அவள் புரிந்து கொண்டாள்.

'மஞ்சரி, என் இறைவன் இசை ஏனடி என்னை துன்புறுத்துகிறது? அவனது இசை நாதம் என் செவிகளில் தீக்கொழுந்து செல்வதுபோல் இருக்கிறதடி.'

அழல்போலும் மாலைக்குத் தூதாகி ஆயன். குழல் போலும் கொல்லும் படை 'யடிபடை!' என்று பெருமூச் செறிந்து கொண்டாள்.

'ஆதிவல்லி, நெஞ்சம் அமைதிகொள்! உன் உள்ளம் கவர்ந்தவருக்குத் தானே இத்துளசிதனை தொடுத்துள்ளேன். இத்துளசியை நீ அவர் கழுத்தில் போட்டு...' என்று மஞ்சரி சொல்லி முடிப்பதற்குள் ஆதிவல்லி தன் சுட்டுவிரலால் மஞ்சரியின் செவ்வுதடுகளின் குறுக்கே வைத்து அமைதியாய் இருக்கும்படி சைகை செய்தாள்!

'என் நிலை உனக்குப் புரியவில்லையடி. என் உளநோய் உனக்கு இன்னும் புரியவில்லை!' காதல் எனும் இன்னோய் வைகறைப் பொழுது அரும்புதடி; பகல்பொழுது பேரரும்பாய் முதிர்கிறதடி; இறுதியில் இப்பாழும் மாலையில் மலர்ந்து என் மனம் வாட்டுகிறதடி! என் துன்பம் உனக்குத் தெரியவில்லையா?—'

'காலையரும்பிப் பகலெல்லாம் போதாகி மாலை மலரும் இந்நோய்!'-- நெஞ்சம் நெகிழ்ந்து குரல் மல்க கூறினுள் ஆதிவல்லி!

'அவர் உன்னை விட்டுப் பிரியும்போது நீ அவரை ஏதேனும் கோபித்துக் கொண்டாயா? அதனுல் அவர் இன்னும் வராமல் உன்னை விளையாட்டு காட்டுகிருரோ என்னவோ?—' வருத்தத்துடன் வினவினுள் மஞ்சரி!

'அப்படி ஒன்றும் கோபப்படவில்லை அவர். 'போய் வருகிறேன்' என்று சொன்னவுடன் அவர் பிரிவை ஆற்ற முடியாமல் 'நீ எங்கும் போகாத சேதி உண்டானுல் எனக்குச் சொல்! போய்வருகிறேன் என்று சொல்வதாயிருந்தால் வேறு யாரிடமாவது போய்ச்சொல்' என்று தானடி சொன்னேன்!

'செல்லாமை யுண்டேலெனக்குரை மற்றுநின் வல்வரவு வாழ்வார்க்குரை'- என்று சொன்னது பெரிய குற்றமா? என்ன?'

'குற்றமில்லைதான்! ஆனுல் உன் கண்ணன் குற்றமாய் எடுத்துக்கொண்டு மனைவிமார் எட்டுப்பேரில் யாரிடமாவது குலாவப்போயிருப்பார்!' – குத்தலாகக் கூறினுள் மஞ்சரி.

'யாரடி அந்த எட்டுப் பேர்?'-கொதிப்புடன் கேட்டாள் ஆதிவல்லி.

'சொல்கிறேன்; எண்ணிக் கொள்! ருக்மணி, லக்குமணை, சத்யபாமை, சாம்பவதி, நீளாதேவி, காளிந்தி, மித்திரவிந்தை. பத்திரை...!'- சொல்லி விட்டு குறும்பாக சிரித்தாள் மஞ்சரி!

'என்னைக் குழப்பாதடி!... அவர் மிகவும் நல்லவர்! நாங்கள் புணர்ச்சியில் மகிழ்ந்த ஒரு சமயத்தில் எனது தோளை மூங்கில் என்றும், என் பற்களைமுத்தென்றும், கண்களை வேல் என்றும், என்னுடல் நறுமணம் மிக்கது என்றும் சொன்னுரடி!'

'முறிமேனி முத்தமுறுவல்
வெறிநாற்றம்
வேலுண் கண்
வேய்த்தோளவட்கு!'

என்று சொன்னது என் காதில் தேனுகப்பாய்ந்துள்ளது!-- அவள் பேச்சில் ஏக்கம் கலந்திருந்தது!

'ம். பிறகு?' அமைதியாய் கேட்டாள் மஞ்சரி!

'சொல்கிறேன்; கேள்! நாங்கள் கூடிநின்ற ஒரு சமயம் இப் பிறவியில் நான் உன்னைப் பிரிய மாட்டேன்' என்று சொல்லவும் 'இனி வரும் பிறப்புகளில் பிரிவீரோ?' எனப் புலம்பினேன்! அதற்கு அவர்என்ன சொன்னுர் தெரியுமா?

உனது தோளிலே துயில் கொள்வதைவிட தாமரைக் கண்ணனுகிய எனக்கு என் மேல் உலகம் இன்பம் தருமா? எனும்பொருள்பட-

'தாம் வீழ்வார்
மென்றோட்டுயியி
னிது கொலுமரைக்
கண்ணுலகு!'—

என்ருரடி! அவர் எனைக் கண்டிப்பாய் ஆட்கொள்ள வருவாரடி!'- அவள் பேச்சில் உறுதியும் உற்சாகமும் தொனித்தது!

'உன் நினைவு வெற்றி பெறட்டும்! நீ இப்படி 'கண்ணன் கண்ணன்' என்று உளர்வதைப் பார்த்தால் உறக்கத்தில் கூட அவர் நினைப்பாய் யிருப்பாய் போலிருக்கிறதே!'

'ஆமாம்' என்பதற்கறி குறியாக தலையசைத்தாள் ஆதிவல்லி. என் நனவில் காணுத அவரை கனவிலாவது பார்த்து மகிழ்வதால் தான் என் உயிர் இன்னும் உள்ளது!

நனவினுனல்காணுத
வரைக் கனவினுற்
காண்டெலி
னுன்டென்னுயிர்' —

தெரிகிறதா? என் உயிர் நிலை இதுதான்!'

'தெரிகிறது! உன் உயிர் மட்டும் அவருக்காகஉடலில் ஒட்டி ஊசலாடுகிறது! இல்லையா?' என்று கேட்ட மஞ்சரி ஆதிவல்லியின் பருத்த தோள்களை நோக்கியவாறே 'உன் தோள் மட்டும் ஏன் அப்படி பருத்து விளங்குகிறது? என்று நாசுக்காகக் கேட்டாள்.

'ஓ அதுவா?' என்றபடியே தன் தோள்களை ஒருமுறை தடவிக்கொண்டாள் 'நான் அவரை மணந்த நாள்அன்று வீங்கிய தோளடிஇது! மற்ற எல்லா உறுப்புக்களும் நலம் குறைந்தும், மணநாளை நினைவூட்டும் காரணமாய் இது பூரித்து நின்றன!

'தணந்தமை சாலவறிப்ப
போலு மணந்த நாள் வீங்கிய தோள்!'-என்ருள்நாணியபடியே!

'ஆனுலும் அவர் கல்நெஞ்சரடி! நீ இப்படி இங்கு வாடிநிற்க அவர் எந்தக் ,கோபிகாஸ்திரிகளுடன்' குலவுகிருரோ?'

'மஞ்சரி, நீ சொல்வது போலவும் இருக்குமோ? அதுதான் அவரைக் காணவில்லையோ?' என்றவள் 'ஏ கண்ணு! பல பெண்கள் உரிமைகொள்ளும் உன் மார்பை நான்இனிநினைக்கப் போவதேயில்லை!

'பெண்ணியலா ரெல்லாருங் கண்ணிற் பொதுவுண்பர்
நண்ணேன் பரத்த நின் மார்பு!'

என்று உரக்கச் சத்தமிட்டாள்!

'ஆதிவல்லி; உனக்குஎன்ன மூளை குழம்பிவிட்டதா? உன் நாயகரை இப்படி கொடுஞ்சொல் கூறலாமா?'-மெதுவாய் கேட்டாள் மஞ்சரி.

'மன்னித்துக்கொள்ளடி! மயக்க நிலையில்ஏதோ உளறிவிட்டேன். என்னதான் இருந்தாலும் அவர் என் தலைவரடி! அஞ்சனம் தீட்டும்போது காணுத கோலினைப் பின் கண்டவிடத்து எப்படி பழிப்பில்லாமல் போய்விடுகிறதோ அது போல் கண்ணனைக் கண்டவிடத்து நான் பழி காணேனடி! பழி காணேன்!'- ஆவேசத்துடன் கூறினுள் ஆதிவல்லி.

'ஓ! 'எழுதுங்காற் கோல்
காணுக்கண்ணே போற்
கொண்கன்
பழிகாணேன் கண்டவி
டத்து!' என்கிருயோ?''

### பாலபகவத்

மஞ்சரி ஆதிவல்லியின் இருகரங்களையும் பிடித்து உற்சாகம் பொங்கிட தட்டாமாலை சுற்ற ஆரம்பித்தாள். குதித்தும், பாடியும், கும்மாளமிட்டனர் இருவரும்

கையிலிருந்த துளசிமாலையை ஆதிவல்லியினது கழுத்தில்போட்டுவிட்டு கைதட்டி ஆரவாரம்செய்தாள் மஞ்சரி. இருவரும் குதித்து, துள்ளி, மகிழ்ந்துகூத்தாடிய சமயத்தில் ஆதிவல்லியின் கழுத்திலிருந்த மாலை கழன்று — மரத்தடியில் நின்ற பசுவின் கழுத்தில் விழுந்தது!

'அதோ, என் கண்ணன் வந்துவிட்டான்! பசுவடிவில் என்னை ஆட்கொள்ள வந்துவிட்டான்!' என ஆதிவல்லி இரைந்தபடியே பசுவை விரையவும்—பசு ஓடியது. துரத்தியபடியே ஆதிவல்லியும் ஓடினுள். 'கண்ணு, கண்ணு' என அவள் கதறியது அச்சோலையெங்கும் அதிர்ந்தது.

இதைக்கண்டு திகைத்து நின்ற மஞ்சரியின் காதுகளில் 'குழல்' இசை கேட்டது. அதை அவள்உணர்ந்து கொண்டாள்!

[திருக்குறளை அடிப்படையாகக்கொண்டு எழுதப் பெற்ற கற்பனைச்சித்திரம்.]

# வானத்தாமரை

— நா. யோகேந்திரநாதன் —

## 8

சிவலிங்கம் மெல்லச் சிரித்தான். புரபஸர் பவனி வரும் கீர்த்தி கௌரவம் என்னும் குஞ்சரம். அதன் மேலிருந்து கொண்டு கீழே நிற்பவர்களை அவர் கேலிக் கண்களுடன்–தாழ்ந்த அபிப்பிராயத்துடன் பார்க்கிறார். தன்னைவிட நான் தாழ்ந்தவன் என்றே அவர் எண்ணுகிறார். அவர் என்னைத் தன்வீட்டிற்கு வரும்படி அழைத்தால், அதற்குஅதன் பின்னல் ஏதோ ஒரு சக்தி தூண்டியிருக்கவேண்டும். அவராக தன் இதயத்தின் கதவுகளைத் திறந்து விடட்டும். அவர் வீட்டுக்குள் அடியெடுத்துவைப்போம்.''

சாருகேசி நிம்மதியாக ஒரு பெருமூச்சு விட்டாள். ''அப்படியானல் நீங்கள் எங்கே போகப்போகிறீர்கள்?''

''வேறு எங்கே போவது? என்னுடைய அறைக்குத்தான்.''

சாருகேசியின் கண்கள் கலங்கின, ''தன்னந் தனியாக அங்கே போயிருக்கப்போகிறீர்களா?''

''பின் என்ன செய்வது?''

அவள் வார்த்தைகள் சிவலிங்கத்தை சிறிதுநேரம் ஸ்தம்பிக்கவைத்தன. அவன்ஒன்றுமே பேசாது அவர் முகத்தையே பார்த்தான்.

அவளால் பொறுமையைக் கடைப்பிடிக்க முடியவில்லை. ''என்னவரமாட்டீர்களா?'' கேள்வி அதிகாரதோரணையிலிருந்தாலும் கேட்டவிதம் அவளிடம் இறைஞ்சுவதாக இருந்தது.

சிவலிங்கத்திற்கு அவள் கண்களைப்பார்க்கப் பரிதாபமாக இருந்தது. ''ம்......பார்க்கலாம்,'' என ஆரம்பித்தவன், ''நாளை யோசித்துச்சொல்கிறேன்'' என்று முடித்தான். சாருகேசியோ மேலும் தன் உள்ளத்தாபங்களைக்கொட்டி விட்டுக் கடைசியில் ஒரு மாதிரியாக மனமில்லாமலே விடைபெற்ருள். அவன் மனதில் எதுவுமே பதியவில்லை. அது, சந்திரமதி, சாருகேசி என்னும் இருவர் நடத்திய போராட்டத்தின் நடுவே சிக்கித் தவித்துக் கொண்டிருந்தது.

சாருகேசியின் அழைப்பை ஏற்காமல் விடவே முடியாது. அவள் மரணத்தில் கடைசிப்பிடியிலிருந்து வாழ்வின் எவ்வளவோ தூரம் வரை அவனுக்குச் சேவை செய்தவள். அவளுடன் சென்ருலோ சந்திராவின் மென்மலரிதயத்திலே ஒரு துன்பத்தழைவிழுந்துவிடும். சந்திராவின் இதயத்திலே வேதனைப் புயல் வீசினல் என்ன நடக்கும் என்பதைக் கற்பனை பண்ணக்கூட அவனால் முடியவில்லை. அந்த மென்மையான தெய்வ மங்கையின் இதயத்தில் வருத்தம் ஏற்படுத்த யாருக்குத்தான் மனம் வரும்? அவனுக்கு என்ன செய்வது என்றே தோன்றவில்லை. தன்னைக் கரம் நீட்டி அழைக்கும் இருவரும் ஒரேயளவு சக்தியுடன் வெவ்வேறு பக்கத்தில் இழுப்பதை உணர்ந்தான். அந்த இழுப்பிலே உடல் இரண்டாகப் பிளந்து உயிர் பிரிந்து போனல் நன்ருயிருக்கும் போல் தோன்றியது.

அந்த எண்ணத்திலே பிறந்து உறுதி பெற்றது இன்னொரு எண்ணம். அவர்கள் இருவர் கண்களுக்குமே எட்டாத தூரத்திற்கு ஓடிவிட்டால், வேதனைத் தீயின் வேக்காட்டை விட்டு வேறு பக்கம் போய்விடலாம் என நினைத்தான்.

மணி பன்னிரண்டு!

தன்னைக் காத்து உயிர் தந்து மனிதனுக்கிய நர்ஸிங் ஹோமை நன்றியுடன் பார்த்துவிட்டு வளைந்து சென்ற மலைப்பாதைகளுக்கிடையே வேகமாக நடந்தான் சிவலிங்கம்.

அவனை நோக்கி மலையொன்று நகர்ந்து வந்து கொண்டிருந்தது. அகன்ற அதன் அடிப்பரப்பிலே சிக்கி எங்கே இறந்துவிடுவோமோ என்ற எண்ணத்தில் சிவலிங்கம் கண்களை அகலத் திறந்து இமையாமற் பார்த்துக்கொண்டிருந்தான்.


கதிர்காமம் போய்க்கொண்டிருந்த அந்த பஸ் லாவகமாக வளைவிற் திரும்பிக்கொண்டது.

சீறிச் சினந்து போருக்ுப் புறப்பட்டதென அவனை நோக்கி வந்த அந்தக்குன்றுகள், அப்பால் விலகிச் சென்றன. பஸ் ஓடிக்கொண்டிருந்தபொழுது அவை தன்னை நோக்கி வருவது போற் தோன்றவைத்த மாயையில் ஒருகணம்தன்னை மறந்ததை எண்ணித் தனக்குள்ளாகவே வெட்கப்பட்டுக்கொண்டான். எங்கோ சமயப் பிரசாரத்திற் கேட்டவைகள் அவன் நினைவில் விழுந்தன. ''உறவு, சுற்றம், சுகம், இன்பம், துன்பம் என்ற மாயைகளில் மனிதன் மயங்குகிறன். இந்தக் கொடிய ரோகத்திலிருந்து மனிதனைக் காக்கும் மருத்துவன் இறைவனே. உலகில் அவனும், ஆன்மாவுமே நிலைபெற்ற பொருட்கள். அந்த ஆன்மா இறைவனை உணர ஆரம்பிக்கும்பொழுது தான் மனிதன் மாயைத்திரையில் வெளிவந்து இறையருளிற் பூரணத்துவம் அடைகிருன்.''

சிவலிங்கம் மாயைக்கடலிலிருந்து முற்ருக வெளியேறிவிடவில்லையாயினும், கைக்ககப்பட்ட மிதப்புக் கட்டையாய்கடவுளை உணர்ந்தான். அவன் வாழ்வுக்கடலின் குழப்ப அலைகளால் அங்குமிங்கும் இழுக்கப்பட்

(6-ம் பக்கம் பார்க்க)

குறுநாவல்



அடடா! பொன்ட்ஸ் பாவித்திருக்கிருய், போலிருக்கே,

ஆகா, என்ன சுகந்தம்! என்ன அழகு!

அழகு பெண்மணிகள் தேர்ந்தெடுப்பது பட்டுப்போல் மிருதுவான, நேர்த்தியான பொன்ட்ஸ் டிரீம்பிளவர் டால்கம் பௌடர், ஏனெனில் அது அழகினுக்கு அழகுச்செய்து, ஸ்நானத்திற்கு பின் அனுபவிக்கும் குளிர் புத்துணர்ச்சியை எப்போதும் அளித்து, உடல் முழுவதும் இனிய நறுமணம் சூழ்ந்திருக்கச்செய்கிறது.

நறுமணம் சூழ்ந்த புத்துணர்ச்சியுடன்,
அழகிய தோற்றமளிக்க,
பொன்ட்ஸ் டிரீம் பிளவர் டால்கம் பவுடர்
பாவியுங்கள்.



# சிறுகதை

(7ம் பக்கத் தொடர்ச்சி)

பயப்பிடணும்... இதுகள் சின்னஞ்சிறுசுகள்... இப்பவே கசுட்டத்தை கொடுக்கப்படாது. என்ன செய்கிறது...!

நெஞ்சமெனும் குட்டையை பலமுறை அழுத்தி அழுத்தி கலக்கி அதனிடத்தில் தெளிந்த நீரைப்பெற முயலும் சீதைக்கு வெற்றி கிடைக்குமா...?

சீதையாச்சியின் இருதயம் என்ன மெழுகா...?

மெழுகு இதயத்தில் பிள்ளையென்ற அலகில்... கிளையில்... அரும்பும் பூக்கள் என்ற சிறுசுகளின் பாசம் வந்துபட்டு எரியும்போது உருகி... உருகி— ஓடுவது தெரிகிறது. மெழுகு... உருகி— குளிர்வடையும் போது உணரமுடிவது போல— இதயத்தில் தனிக் குளிர்ச்சி...! மலைச்சாரல் நீர்க்குதிப்பில் தோய்ந்தது போன்ற இதம்— பூரிப்பில் மனம்நிரம்பித் ததும்புகிறது சீதை ஆச்சிக்கு புனிதம் என்றால் பிடிப்பு... ஒன்றும் போது மகுடிமுன் பாம்பாகி விடும் சுபாவம்,..

''ஆச்சி ஆச்சி.. நீதான் கண்ணைப்பொத்தி விடணும் முதல்... சரிதானே... ஆச்சி...''

''ஆச்சி... நீ கண்ணூரே கடையாரே காக்கணவன் பூச்சியாரே எனக்கொரு முட்டை ஒனக்கொரு முட்டை கொண்டோடிவா எண்டு சொல்லு இன்ன... முதல்ல கண்ணைப் பொத்தறப்போ எல்லோரும் ஓடி ஒளிச்சுடணும். நாஞ்சும் வந்து பிடிக்கிறதுக்குள்ள ஆச்சியிலேவந்துமுட்டிட்டாஅவங்களெல்லாம் பழம்... நான் பிடிக்கிற ஆளு கண்பொத்த வரணும்... இன்ன, தெரியுமில்ல...''

அத்தனை பிள்ளைகளும் பொம்மயாகி சரி என்பதற்கு தலையாட்டுகின்றனர்—

சொன்னபடி, புனிதத்தின் கண்ணை சீதையாச்சி பொத்தி விடுகிறாள். அயல் சின்னப்பிள்ளைகள் கண்ணன், நாதன், கேதாரன், தருமன் எல்லோரும் புனிதத்துடன் கண்ணும் பூச்சி விளையாடும் போக்கில்... ஒவ்வொருவரும் ஒவ்வொரு மறைவில் ஓடி ஒளித்து விட்டனர்...

புனிதத்தின் கண்களைப் பொத்திய கைகள் எடுபட, வில்லிருந்து புறப்பட்ட அம்பாகி அவள் துள்ளி ஓடுகிறாள். அதன் அழகு... அசைவில் எத்தனை துள்ளல்... கால்களைதொங்கிதொங்கி.. குதிக்கும் அவள்— பாதங்கள் நிலத்தில் பாவாமல்... அடியெடுத்து வைத்துக் கொள்வதை ரசித்த வண்ணம் சீதையாச்சி இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாள்...

''ஆச்சி சொல்லித் தாணை... அவையளைக்காணம்... என்ரையாச்சியில்ல... எங்க ஒளிச்சவங்க...''

தாளம்பூ மடல் போன்ற கண் மடல்கள், அதனுள்ளே தேனருந்தச் செல்லும் கருவண்டு போன்ற விழிமணிகள் அதன் அசைவுடன் ஒத்தூதும் பாசத்தின் அழைப்பு. இளம் பிருகு இதழிலிருந்து உதிர்ந்த வார்த்தைக்கு இவ்வளவு வலிமையா...? அந்த வார்த்தை தேனருவியாகி இனிக்கிறது... சீதைக்கு... இதயமலரில் வருடுவது போன்ற இதம்...

''ஆச்சி என்னணை இன்னும் காணம்...''

குழந்தைகள் இதயமென்ன ரோசாமலர்களா...?

இதமான அந்த மென்மையான ரோசாக்கிளையிலிருந்து ஒடித்து, தரையில் வீசியெறிந்து சுமைஎன்ற வெம்மையைப் பாச்சுவதென்றால்... மெதுவான இளம் பிருகு உள்ளம் வாடிவதங்கி இளமை ஒளியை சிதறடித்து வாசனையும் நிறமும் அற்ற மலராகி உடல் தளர்வதானால்., இன்பத்திற்குப்பதில் துன்பச்சுமையை அனுபவிப்பதென்றால்... எப்படி...?

இளம் தளிர்உடலை ஆட்டி அசைத்து நடந்துவந்து சீதையாச்சியின் கன்னத்தில் பஞ்சுபோன்ற முகத்தை உரசி... கைகளால் கழுத்தைச்சுற்றி சங்கிலியாக்கி பிடித்து கருவிழிகளை கயல்விழிகளின்ஒளியுள்தோய்த்து தோய்த்து மலர்த்தி... குறுக்கி... மனதில் உள்ள ஆசைக்கு அலைதலுக்கு... ஒத்தூதுவது போல்... குழைந்து பிறழ்ந்து புனிதம் அழைக்கிறாள்.,.

''ஆச்சி... என்ரை ஆச்சி சொல்லித்தாணை...''

அவள் முகம் பூவாகி விரிந்து மலர... இதழ்ப் பாளைகள் சுருங்கிய சீதையின் முகத்தில் அன்புமுத்தத்தின் முந்திரை பதிய... அவள் சிந்தும் சொற்றொடர்... இனிமையை இரசிக்க இதயச்சுனை ஊற்றெடுக்கிறது சீதையின் நெஞ்சுள்...

கூ... கூ.., கூ... குரல் எடுத்து— ஒளிந்திருந்தவர்கள் கூவியதைக்கேட்டு குரல்வந்த திக்கைநோக்கி விரைகிறாள் புனிதம்...

காலம் ஓடுகிறது..!

அதை ஒடென்று சொல்வாருமில்லை. நில்லென்பாருமில்லை. கால ஓட்டத்தைக் கட்டுப்படுத்துவது மனிதனால் இயலக்கூடியதா—! காலத்தின் கொடுமையை என்னவென்பது...: அதற்கு அலுப்பில்லை, ஓய்வில்லை...

ஆனால் யந்திரம் அப்படியல்லவே—!

அதற்கிடையே கோளாறு ஏற்பட்டு ஓய்ந்து நின்று விடுகிறது. மனிதனும் ஒரு யந்திரம்தானே...! அந்த மனித யந்திரம் எப்பொழுதும் கட்டுச் சுறுக்காய் வேலை செய்யுமா...? என்றாவது ஒருநாள் களைத்துவிடத்தானே செய்கிறது?

சீதையாச்சியின் வாழ்வில் கஷ்டங்கள் பலதடவை சோதித்துவிட்டன. அதன் இக்கட்டில், ஏன்தான் நான் இன்னும் பூமிக்கு பாரமாய் இருக்கவேண்டும்—? இறந்துவிட்டால் மேல் என அலுத்துக்கொள்வாள் பசியில் மனம்படும் அவலம்—என்ன செய்வது—! மறுகணம் பாசத்தின் வசமாகி சுழியிடும் மனம்— பிள்ளை பேரப்பிள்ளைகளைவிட்டுவிட இடம் கொடுப்பதில்லை. அவர்களின் ஆக்கம் அவளின் வாழ்வில் 'தணிக்கமுடியாத ஆசை நீர்ஊற்றுப் போலச் சுரந்து பரந்து ஒவ்வொரு கலத்திலும் புதுத்தெம்பை யூட்டுகிறது. குமுறும் மனம் குளிர்வடைகிறது. எல்லாம் பாசத்தின் இழையில் இயங்குகிறது.

ஃ ஃ ஃ

இன்று வெள்ளிக்கிழமை—!

சீதை ஏறுமாறுகவே அப்பத்தைச் சுட்டுவிட்டாள். காற்பங்கு கூட விலைபோகவில்லை. அப்பம் சுட்டு அடுக்கி வைத்தாற்போல் இருக்கிறது. அதற்குச்செலவான மாவும் தேங்காயும் பத்துருபாய் வரை இருக்கும்—

''எப்படியாவது விற்குக வேண்டும்—இல்லையென்றால் இவ்வளவு நாளும் எடுத்த லாபமும் இன்று போய் விடுமே...''

நினைத்தபொழுது மனதில் பயம்—பஞ்சியைப் பாராமல் ரோட்டில் கொண்டு போய் தோட்டங்களிலே வேலை செய்யிறதுகளுக்கெண்டாலும் வித்துப் போடுவம்— அப்பத்தை எடுத்து பெட்டியில் அடுக்கிக் கொண்டு எழுந்துநடந்தாள் சீதை—

வீதியில் இரண்டு மைல் நடந்தாயிற்று. இன்னமும் அவள் நினைத்தபடி விலைபோகவில்லை. கால்கள் தளர்ந்து தள்ளாடின. முகம் தொய்நதுவிட்டது. மனதில் களை—

''என்ன செய்யிறது. செல்லி பேசப் போறாள். அவள் சொன்னதையும் கேட்காமல்... நாலு சதம் கூடவரும் என்ற ஆசையில சுட்டுப்போட்டன்—'' சீதை ஆச்சியின் மனம் ஒரு நிலையிலில்லை...

வீட்டை நெருங்குவதற்கிடையில் ... மழை பிடித்துவிட்டது— தும்பைப் பூப்போன்ற தலைமயிர் நனைந்து தோய, கடுமையாக களைத்துப்போய் பயந்து கொண்டு வந்தாள்.

''எடிபிள்ளை, இண்டைக்கு இருபதுசோடிவரை மிஞ்சிவிட்டுது.''

''சரி, எனியென்ன செய்யிறது. மத்தியானமும் வைச்சு சாப்பிட்டால் போகிறது. மழைக்குள் நனைஞ்சு கொண்டாவந்தனி. ஈரத்தை துடை, சுவர முந்தி—''

சீதைக்கு இப்பொழுதுதான் மூச்சுகொஞ்சம் இளகியது.

''அப்பாடா'' மனதுள்ளே சொல்லியாறுகிறாள்.

செல்லிக்கு இன்று மழை என்றதும் புகைச்சல்...

''சீ...இந்த பாழாய்ப் போன மழைவந்துஊத்துது. எட, அவன் முருகன் இண்டைக்கு எனக்கு நாலுரூபாயும்...அதில நட்டம். இந்த நேரத்தில தானா இதுவும் வரவேணும்..''

ஃ ஃ ஃ

சீதைக்கு ஒரே குளிராக்கிப் போட்டுது. முனகிக் கொண்டு சீலைப்போர்வையுள் புழுப்போல் குறண்டி சுருண்டு கிடக்கிறாள், எப்பொழுதும் போல அவளால் அசையமுடியவில்லை. அப்பம் சுடும் சட்டிகளும் தேங்காய் துருவலகும் குசினிக்குள்ளே போட்டபோட்டஇடத்தில். அப்பம் சுடும் அடுப்புள் பூனை படுத்துக் கிடக்கிறது. அதற்குப்பசி. மற்றை நாளையில் இன்னேரம் சட்டி அப்பம் அதற்குக்கிடைக்கும். இன்று அதற்கும் பசி...சாம்பலுக்குள் தனது உடலைத் தோய்த்து உருண்டுபுரண்டு பாதிக்கண்ணைமூடியும் மூடாமலும்...ஈனக்குரலில் தனது வயிற்றுப் பசியைச் சொல்கிறதா—?

''மியாவ்...மியாவ்..'' வாலாடுகிறது—

இரவு உணவை அருந்தும் போது பிள்ளைகளின் நினைவு...!

''நாளைக்கு அப்பமும் சுடமுடியாது. சின்னப்பிள்ளையள் பசியோடை போகுங்களா.. அதுகளுக்கும்கொஞ்சம் இருக்கட்டும்...''

பானையில் நீரிட்டு சிறிது சாதம் வைத்திருந்தாள்.

காலையில் வேலைக்குப் போகும்போது—

''பழஞ்சோறு வைச்சிருக்கிறன், பள்ளிக்கு போறப்போ சாப்பிட்டிட்டுப் போங்க — நேரம் போச்சு நான் போசிறன். கொஞ்சம் பிந்தினாலும் நேரஞ்செல்ல வந்ததெண்டு பேசுவாங்கள். நான் போறன் அப்பு,என்ன...''

மூன்றுபிள்ளைகளும் பானை முன் குந்தி விட்டார்கள். அவர்களில் பெரியவன் பழைய சாதத்தை மூன்று தட்டிலும் வார்த்து வைத்தபின் குடிப்பதற்கு வாய்க்குக் கிட்ட கொண்டு போனான்— போகும் சமயம் கத்திக்கொண்டு ஓடிவந்த பூனை அவனது கால்களில் தனது உடம்பைத்தேய்த்து முறுகியபடி அவனைப் பார்த்து நின்றது.

''மியாவ்— மியாவ்—''

ஒருபிடிசோற்றை அதற்கு எடுத்து வைத்தான். பூனை அந்தக் கவளம் சோற்றை 'அவக் அவக்' என விழுங்கியது.

பாவம் அதற்கும் பசி...

மூவருக்கும் பத்தாப்பத்திரம்; போதவில்லை என்று யாருக்குச் சொல்வது...! புத்தகங்களை கையில்அடுக்கி அணைத்து பிடித்தபடி பாடசாலையை நோக்கி விரைந்தார்கள்.. படிப்பதற்கு ...

ஃ ஃ ஃ

செல்லி வேலை முடிந்து வந்தாள். அவள் கையில் பணம் இருப்பதாகத் தெரியவில்லை. சீதைக்குக் காலையிலும் பசி நேற்று முழுவதும் ஒன்றுமில்லை. வயிற்றில் பசி.. இரைப்பையை குடைகிறது. என்ன செய்வது? நோய் குணமாகவேண்டும். மனதை இழுத்துப்பிடித்து நிறுத்தி அதன் அலைதலைக் கட்டுப்படுத்திக் கொண்டாள்.

''பிள்ளை முருகன், கண்டு கட்டின காசு தரவில்லையோ..''

''அவன் நாளைக்குத் தாறதாம்..''

''அவங்களுக்கென்ன, சொல்லிப்போட்டு இருந்திடுவாங்க. பிள்ளையள், பள்ளியாலை வரப்போகுதுகள்,மத்தியானமாப் போச்சு ''

அடுத்தவீட்டிலைவரவேண்டிய அப்பக் காசுக்குப் பதிலாக அரிசி வேண்டி அடுப்பு மூட்டி உலை வைத்தாள் செல்லி

''பொடியள் வந்திட்டுது—''

''வந்தா என்னணை, பொறன்''- செல்லிக்கு எரிச்சல் புகைஞ்சது.

''எணை அம்மா பசிக்குதணை—ணேய் அம்மா, பசிக்குது—''

கொஞ்சம் பொறுங்க. அரிசி உலையில போட்டிருக்கிறன், வேகட்டும்.''

''காலமையும் பத்தாது, சோறுகெதியாய்த்தாணை—''

கடைக் குட்டிப் பெட்டை சிணுங்கினாள்... அடம்பிடித்தாள். குசினிக்குள் சருவச் சட்டிகளைத் தூக்கிப் போட்டுடைத்தாள் புவனம்.

பொறுமையைச் சோதிப்பது போல் இருந்தது செல்லிக்கு ... ஆத்திரம் — அதன் குமிழிகள் பொட்டுப்பொட்டென தோன்றித் தெறிக்கின்றன முகத்தில் கையிலிருந்த அகப்பைக்காம்பினால் அடித்தாள்.

சின்னவள்புனிதம்துடித்து நெளிந்து பதைத்தாள்.

''அம்மாணேய் — அடியாதையணை ... அடியாதையணை...''

குளிரென்று மூலையில் கிடந்த சீதையாச்சி ஓடிவந்தாள்.

''பாவம் பிள்ளை, சின்னதுகளுக்கு இப்பிடியா அடிக்கிறது.''

''என்ரை பிள்ளை சொல் கேக்காவிட்டால் அடிப்பன், உதைப்பன்— அது என் இஷ்டம்...''

''ஓ– பின்னை ஏறிமிதியன்ரி ... என்னடி .. உனக்கென்னடி...''

''ஓ – ஓ ... எனக்குத்தான் திமிர் ...நீ செய்து வைச்ச லெச்சணத்திலை... தந்துவைச்ச சீதணத்திலை — தின்டு போட்டு கிடக்கிறள். எனக்கென்ன கொழுத்துத்தான் ஆடுறன் - நான் படாத பாடு பட்டுத்தாறன், நீங்களும் சேர்ந்து தின்னுங்க—''

''ஏன் நான் உழைக்கவில்லையோ...''

''அதுதான் முந்தநாத்து நீ சுட்டு வித்த லெச்சணத்திலை...கிழிகிழிஞ்சுபோச்சு... கடனுக்குக் கொடுத்திட்டு வந்திட்டு உன்ரை அகங்காரக் கொழுப்பிலும் குறைச்சலில்லை—''

"ஆ...நான் உழைச்சா எனக்குக் காணுதோ... காக்கொத்தரிசிக்கு உழைக்க ஏலாதோ — கவுண்மேந்து தாற பத்து ரூபாய் போதுமடி எனக்கு — எங்கையெண்டாலும் போகத்தான் வேணும். எந்த நாள் பாத்தாலும் இவள் என்னோடை மல்லுக்கட்டுறள். சும்மா புறுபுறுகறகறண்டு பேசிறு... ஒரு மாதத்துக்கெண்டாலும் என்ரை அக்கைமகள் வீட்டைபோய் இருந்திட்டு வரவேணும். அப்பதான் அருமை தெரியும். அவள் தன்னோடை வந்து துணைக்கு இருக்கச் சொல்லிக் கேட்டவள் — நானும் ஏதோ என்ரை... பிள்ளை — பிள்ளை எண்டு பாத்தா...''

''ஓ- ஓ— போவன் இஞ்சையாரு,மறிக்கினை ''

''டி... ஓமடி... உனக்கு உன்ரை வாய்க்கொழுப்பிலும் தான்நீ இப்படிக் கிடக்கிறு—''

சீதையாச்சியின் சிணுங்கல் நீர் மழைத்துமியாகி நிலத்தில் வழித்தெறியப்படுகிறது. சீதைக்கு உள்மனதில் சிறுகிறல் விழுந்து விட அழுகை சுரந்தது. ''டி— ஓமடி...ஓம்பேசாமைகிட...''

''முட்டைக்கண்ணீர் ஊத்துறு... தன்ரை மச்சானின்ரை மகன்எண்டுசெய்து போட்டு. இப்ப முட்டைக் கண்ணீர் வேறை...''

புவனம் சிறியவள், அடியின் வலியில் அழுது ஓய்ந்து வெறு மண்ணிலே படுத்து உறங்கிவிட்டாள் மற்றவர்கள் இருவரும் தாய்க்கும் சிதைக்கும் நடக்கும்சொற்போரின் கோரத்தைக்கண்டு பயந்து ஒடுங்கி ஒன்றும் போசாது ஒதுங்கி மூலையில் குந்தி இருந்து கலவரத்துடன் பார்த்துக் கொண்டிருந்தனர்—

செல்லி சோறும் சமைத்து சம்பலும் அரைத்துவிட்டாள். முதலில் சீதையாச்சிக்கு குடிநீர் வைத்து இறக்கிவைத்தாள்...

''ஆச்சி— குடியன்...'' செல்லி கெஞ்சினாள்.

''எனக்கு வேண்டாம் போ உன்னட்டை வேண்டிக் குடிக்கிறதும் போதும் நீபடுத்துகிற பாடும்போதும்...''

''என்ரை ஆச்சியல்லே ..''

சீதையின் நாடியைத் தடவிக்கொண்டே ''என்ரை ஆச்சியல்லே குடியணை பின்னை நான் வேலை செய்து வந்து ஆக்கிக்கொண்டிருக்கையில் கதைச்சா— எனக்கும் பசி... எனி ஒண்டும் சொல்லையில்லைக்குடி...''

சீதையின் மனசு இளகியது. குடிநீரை வேண்டிக் குடித்தாள்.

''டியே புவனம் எழும்படி சாப்பிட...''

''சோறும் வேணும் ஒண்டும் வேணும் போநீ... எனக்கு அடிச்சனியோ; இஞ்சை பாரன்..'' கொழுக்கட்டைமாதிரி தடித்திருந்த கால்துடையை திருப்பிக் காட்டினாள்.

''நல்லபிள்ளையல்லே என்ரை குஞ்சல்ல, சாப்பிட வாடி கண்ணு...''

''எனிமேலும்அடிப்பியோ அடிக்கமாட்டன் எண்டு சொன்னாத்தான்''

''நான் அடிக்கேயில்லைசாப்பிடு வா ''

''இல்லைப்போ வேண்டாம் என்றால் வேண்டாம் தான்'' புவனம் கொஞ்சமும் இளகுவதாயில்லை.

செல்லியின் மனம் உள்ளே அழுகிறது. நான் ஆத்திரத்தில் அடிச்சுப்போட்டன், ஈவு இரக்கமில்லாமல்என்மேல் பிழைதான். நான் பெத்ததுஎப்பிடியிருக்கும் என்னிலும் பார்க்க மூன்றுமடங்கு அகங்காரம் அவளுக்கு. இருக்காதா என்ன?

புவனம் முடியாது என மறுமுறை சொன்னதும் செல்லிக்கு பொறுக்கவில்லை.

நான் எங்கையேன் போய்த் துலைஞ்சிட்டாலும் தேவையில்லை. இதுகளோடை நான் படுறபாடு— கையை முகத்தில் மூடியபடி அழுதாள் செல்லி...

பார்த்துக் கொண்டிருந்த புனிதம் தாய் முகத்தில் பொத்தியிருந்த கை இரண்டையும் தனது தளிர்க்கரத்தால் விலக்கிப்பார்க்கிறாள்.

செல்லியின் கண்களில் கண்ணீர் கடல் வெண்முத்துக்களைப்போல் திரண்டு உருண்டது,

(6-ம் பக்கம் பார்க்க)

## இராசிபலன் ...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

னேற்றத்தில்முட்டுக்கட்டைகளும் கஷ்ட பிரயாணங்களும் சிறிய விபத்துக்களால் உடல் நலம் பாதிக்கப்படலும், பண முறையில் ஓரளவு திருப்தியும், உத்தியோகத் துறையில் வழமையான நிலைமையும், வர்த்தகத் துறையில் அபிவிருத்தியின்மையும் பெண்களுக்கு நற்பலன்கள்கிட்டல், பிரயாணசுகம், அமைதி, பண வருவாயும் காணப்படுகின்றன.

**மகர இராசி**

இவ்விராசியாளருக்கு இவ்வாரம் சென்றகாலத்திலும் பார்க்க கஷ்டங்கள் குறைவாகவும், முயற்சிகளில் வெற்றி, இலாபம் கிட்டல், சந்தோஷம், எதிரிகள் வீழ்ச்சி, செல்வாக்கு விருத்தி, நல்ல நண்பர் சேர்க்கை, சுபகருமகொண்டாட்டங்கள் நடத்தல், தேகாரோக்கியநலம், பண வருவாய் சுமார்ாக இருத்தல், கமத்தொழில் வளம் பெறுதல், அரசாங்க உத்தியோகத்தினர் பொதுவாக சுகமடைதல், கடமை உணர்ச்சி யுடையார்க்கு நற்பலன் கிட்டல், வர்த்தகம் சமமாக இருப்பினும் புதியனவுக்கு நற்காலமாக இல்லாதிருத்தல், பெண்களுக்கு ஆண்கள்தொடர்பை நீக்கி அமைதியாக விட்டிருத்தலால் நலன்களும் காதல்விவகாரங்களைவிலக்கி நடத்தலும் அவசியமாகவும் பணநிலைமையில் மத்திமபலனும் காணப்படஇடமுண்டு.

**கும்பராசி**

இவ்விராசியாளருக்கு இருவித பலன்களும் கலந்திருப்பினும் இவ்வாரம் சிறிது நன்மைப்பேறுகள் இருக்க இடமுண்டு. தொழில்களால் இலாபம்கிட்டல், சந்தோஷநிலமை, நண்பர்களால் உதவிகள், எதிரிகள் அமைதியாக இருத்தல, தேகசுகம் ஓரளவு அபிவிருத்தியடைதல், பணநிலைமை மத்திபமாக இருத்தல், குடும்பத்தில் சச்சரவு குறைதல்,உத்தியோகத்துறையில் மேலதிகாரிகள் நிலைதிருப்தியடைதல பணியாளர்துன்பம் விழைதல், வர்த்தகத்துறை மந்தகதியாகவிருத்தல், பெண்களுக்கு சமூகநிலையில் செலவாக்குயர்தல், சுபகருமப்பேறுகள் நடத்தல், சிலருக்கு பெண்மகப் பேறு கிட்டல் அவர்கள் தொடர்பால் கஷ்டமேற்படல் ஆதியன காணப்பட இடமுண்டு.

**மீனராசி**

இவ்விராசியாளருக்கு இவ்வாரம் இரு வித பலன்களும் கலந்து நடப்பினும் வாரஇறுதியில் விபத்துப் போன்றவற்றில்ஜாக்கிரதை அவசியமாகும். பொதுவாக இவர்களுக்கு தொழிலில் இருவித பலன்களும் நடக்கும். மந்தகதியில் பணநிலைமையிருக்கும். நல்லநண்பர்கள் உதவி சந்தர்ப்பங்களுக்குதவும். எதிரிகள் துன்பங்கள் விளைத்தாலும் அவை உடனுக்குடன்தவிர்க்கப்பட இடமுண்டு. உத்தியோகத்துறையினருக்கு கஷ்டமுண்டு. தொழில் முதனியவற்றிலபின்னடைவு.பரீட்சைகளில் தோல்வி, அதிகாரிகள் வெறுப்பு ஆதியன காணப்படும். வர்த்தகத் துறையில நற்பலன்கள் கிட்டலாம். நிதானம் நன்மை தரும்.பெண்களுக்கு குடும்ப சுகம், பிரயாண நன்மை, சமூகமதிப்பு, பண நிலைமையில்சுமுகமான சூழல், காதல் விவகார வெற்றி காணப்பட இடமுண்டு.

## இராணுவ ஜீப் மோதி காயமுற்றார்

வல்வெட்டித்துறை, சனி

வல்வெட்டியைச் சேர்ந்த க. தில்லைநாதன் என்பவர் வீதியால் நெடியகாடு நோக்கிச் சென்று கொண்டிருக்கையில் காங்கேசன்துறையிலிருந்து பருத்தித்துறையை நோக்கிச் சென்று கொண்டிருந்த இராணுவ ஜீப்வண்டி வல்வெட்டித்துறை அமெரிக்கன் மிஷன் பாடசாலைக்கு அருகாமையில் அவர் மீது மோதியதால் கடுமையான காயங்களுக்குள்ளானார். ஸ்தலத்துக்கு உடனடியாகச் சென்ற பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம் காயமடைந்தவரை பருத்தித்துறை அரசினர் வைத்திய சாலைக்கு அனுப்பிவைத்தார். காயமடைந்தவருக்கு 7 பிள்ளைகள் உண்டு என்றும் அன்றாடம் உழைத்தே சீவனம் செய்பவர்என்றும் அறியப்படுகிறது.

## சிரமதானப்பணி

வல்வெட்டித்துறை, சனி

வல்வெட்டித்துறை பொலிகண்டி மீனவர் குடியேற்றத் திட்டத்திலுள்ள புதர்பற்றைகளைத் துப்புரவு செய்யும் சிரமதானவேலை இரண்டாவது முறையாக வடமராட்சி காரியாதிகாரி திரு. ஜே. டீ. ஆர்னல்ட்தலைமையில் நடைபெற்றது.

இச்சிரமதான வேலையில் வல்வெட்டித்துறை விளையாட்டுக் கழகங்களும், தமிழரசு, கம்யூனிஸ்ட் வாலிப முன்னணிகளின் அங்கத்தவர்களுமாக 150 இளைஞர்கள் ஈடுபட்டனர். வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, புலோலி தெற்கு, தொண்டமானாறு, கற்கோவளம் ஆகிய கிராமசேவகர்களும் கலந்துகொண்டனர்.

சிரமதானப் பணியில் கலந்து கொண்ட யாவர்க்கும் வல்வை பட்டினசபை அங்கத்தவர் திரு. தி. நவரத்தினம் மதிய போசனம் அளித்தார்.

## பிரம்ம ஞானி ...

4-ம் பக்கத் தொடர்ச்சி

குக்கடவுளினுலும்ஸ்ரீ குருபகவானுலும்அருளப்பட உயர்வொப்பில்லாதஆன்மீகவரப்பிரசாதமாகும்.

ராஜயோகம், கர்மயோகம், ஞானயோகம், பத்தியோகம்யாவற்றிலுமே கரைகண்டவர் சுவாமிஜி. அவர் சமீபத்திலிருக்கும்போதே ஒருவித தெய்வீகசக்தி எம்முட்பாய்வதை உணரலாம், அவர் பாதம்பட்ட இடம் புனிதமடைந்துவிடும். சுவாமிஜி ஒரு தலைசிறந்த ஜீவன்முக்தர், இவரைப் பற்றிக் குருதேவர் கூறியதாவது:—

"ஸ்ரீசுவாமி சிதானந்தஜியை நான் எனது குருவாக மதிக்கின்றேன். நீங்களும் அவ்வாறே கொள்ளவேண்டும். அவரிடம் நாம் எண்ணிறந்த பாடங்களைக் கற்கலாம். அவரின் அறிவு அகன்றது. மலையருவிபோன்று உள்ளத்துள்ளிருந்து வெளிவருவது. அவர் அருளுக்கு நிகர் அஃதே. அவரைப் பின்பற்றினுல் நீங்கள் ஆன்மீக வழியில் துரிதமாக முன்னேறுவது நிச்சயம்.

குறிப்பு:—

இப்புண்ணியசீலர் இன்று (31—6—65) விமானமூலம் கொழும்பு வந்து சேர்கிருர், யாழ்ப்பாணம், கண்டி, திருகோணமலை, மட்டக்களப்பு, நாவலப்பிட்டி ஆகிய இடங்களுக்கும் சென்று அருள் மாரி பொழிய அன்பர்கள் ஏற்பாடு செய்கின்றுர்கள்.

# அகில இலங்கை பாடசாலைகளின் கிராமிய நடனப் போட்டி

## யாழ்ப்பாணத்தில் நடைபெறும்

குரும்பசிட்டி, சனி

"யுனெஸ்கோ" ஆதரவில் அகில இலங்கை பாடசாலைகளின் கிராமிய நடனப் போட்டியின் இறுதி விழா முதற் தடவையாக நடைபெற இருக்கின்றது, இப்போட்டி விழாவின்போது கண்டிய சிங்கள கலாச்சார முறைகளிலும் பண்டைய தமிழ் கலாசார முறைகளிலும் அமைந்த கிராமிய நடன நிகழ்ச்சிகள் இடம் பெறும். இவற்றுடன் கைப்பந்தாட்ட, வலைப்பந்தாட்டப் போட்டிகளும் நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது. சுமார் 25 கல்விப்பகுதி வித்தியாதரிசி வட்டாரப் பிரிவுகளிலிருந்து 47 கல்லூரிகள் இந்தஇரு போட்டிகளிலும் மேற்பிரிவு, கீழ்ப்பிரிவு என இருபிரிவுகளாகக் கலந்துகொள்ளும். செப்டெம்பர் மாதம் 3-ம் 4-ந் திகதிகளில் நடைபெறவிருக்கும் இவ்விழாவிற்கு கல்வி கலாச்சார மந்திரி திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்லை தலைமை தாங்கி வெற்றியீட்டும் பாடசாலை மாணவர்களுக்கு பசுகள் வழங்குவாரென அறியப்படுகிறது, வடபகுதி உதவிவித்தியாதிபதிதலைமையில் அமைக்கப்பட்டுள்ள கமிட்டியொன்று விழாவை சிறப்பாக நடாத்த வேண்டிய ஏற்பாடுகளை கவனித்து வருகின்றது,

## பாடசாலைகளில் அரசியலுக்குத் தடை

பம்பலப்பிட்டி, சனி

எந்த ஒரு அரசியல் கட்சியைச்சார்ந்தபத்திரிகையோ அல்லதுசஞ்சிகைகளோபாடசாலைகளிலுள்ள நூல்நிலையங்களில் இருக்கக்கூடாது என தடைவிதிக்க கல்வி இலாகாமுடிவுசெய்துள்ளது.

பாடசாலைகளில் எந்த ஒரு பக்க சார்புள்ள அரசியல் கருத்துக்களும் பரப்பப்படாதவாறு தடுக்குமுகமாகவே இவ்வித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

எந்த ஒரு பாடத்தையும் குறிப்பாககுடியியல்போன்ற பாடத்தை போதிக்கும் போதும் மாணவர்களது விளக்கத்துக்காக அரசியல் சார்புள்ள பத்திரிகைகளை உபயோகப்படுத்தக் கூடாது என ஆசிரியர்களுக்கும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

---

முல்லைத்தீவு, சனி

முல்லைத்தீவுப் பட்டினசபைத்தொழிலாளி வெள்ளையன் மனுவேல் என்பவருடைய ஒரு பட்டி ஆடுகள் மேயவிடப்பட்டபோது இனந்தெரியாதவர்கள் அவற்றைக் கடத்திச் சென்றுள்ளதாக முல்லைத்தீவுப் பொலிசில் புகார் செய்துள்ளார். இவை லொறிமூலம் ஏற்றப்பட்டுக் கொழும்புக்கு அனுப்பப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது.பொலிசார் புலன்விசாரணைசெய்கின்றனர்.

## நிறை அளவு திடீர் பரிசோதனை

ஊர்காவற்றுறை, ஞாயிறு

யாழ்ப்பாணம் மாநகர சபை நிறை அளவு பரிசோதகர்கள் சென்ற வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் மார்க்கெட் கடைகளில் பாவிக்கப்படும் படி, தராசு ஆசியவற்றை திடீர் பரிசோதனை செய்தனர்.

பரிசோதகர்கள் பரிசோதனையின்பின் சில கடைகளிலிருந்து தராசுகளையும், படிகளையும் சுவீகரித்துக்கொண்டனர். படி, தராசுகளை சரி பார்த்து பதிவு செய்து கொள்ள வேண்டுமெனவும் பரிசோதகர்கள் அறிவித்தல் செய்துள்ளதாக அறியப்படுகிறது.

## கிராம சபையின் நன்முயற்சி

கிளிநொச்சி, சனி

கரைச்சிக் கிராமசபை அண்மையில் கூடிய விசேஷ கூட்டத்தில் கீழ்க்காணும் தீர்மானம் நிறைவேற்றப் பட்டுள்ளது,

"அகில இலங்கை தமிழ் மறைக் கழகச்செயலாளரின் 20-5-65-ம் திகதிய கடித மூலம்இச்சபையின்நிதிஉதவி கோரிய விஷயம்பற்றி சபை நன்காலோசித்த பின்னர் மேற்படி திருக்குறள் மகாநாட்டுக்கு இச்சபை ரூபா 475 நன்கொடையாக கிராமச்சபைச்சட்டம் 38,ம் பிரிவுக்கமைவாக உள்ளூராட்சி மந்திரியின் அங்கிகாரத்தைப் பெற்று வழங்குவதெனவும், ஆயின்குறித்த திருக்குறள் மகாநாட்டுநிகழ்ச்சித்திகதிகளில் இச்சபை அக்கிராசனர் பங்குபற்றி இச்சபைப்பகுதி மக்கள்சார்பில்சொற்பெருக்காற்றவோ குறிப்புரைகள் கூறவோ வாய்ப்பளிக்கும் வகையில் குறித்த மகாநாட்டு நிகழ்ச்சிநிரல் தயாரிக்கப்படாமையையிட்டு இச்சபை தனது ஆழ்ந்த வருத்தத்தைத் திருக்குறள் மகாநாட்டு நிகழ்ச்சி நிரல் குழுவுக்கு தெரிவித்துக் கொள்வதெனவும், மேல் வருங்காலங்களில்இத்தகைய அசம்பாவிதச் சம்பவங்கள் நிகழாவண்ணம் பார்த்துக் கொள்ளும்படி மேற்படி மகாநாட்டுக் குழுவை இக் கிராமச்சபைகேட்டுக்கொள்கிறது.

## 31-ம் நாள் பரமபதம் அடைந்த மரணஞாபகம்

புரூக்கர் கபிரியேற்பிள்ளையின் ஆத்மயிளைப்பாற்றிக்காக அடைக்கலநாயகி ஆலயத்தில் திங்கள் காலை 6 மணிக்கு நடைபெறும் பாடற்பூசையில் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய அயலாரும்,உறவினரும்,இதைக் கண்ணுறுவோரும் பங்குபற்றி மன்றுடும்படி வேண்டும் அன்னாரின் பாரியார் மரியம்மா, தந்தையை இழந்த ஸ்ரீமதி பேரின்பரட்டினம் (ஆசிரியை, குளமங்கால்),ஸ்ரீமதி பிறிற்றோ, ஸ்ரீமதிசிவஞானம்(ஆசிரியை வவனிக்குளம்), நீக்கலஸ் (கடற்படை), மருமகன் ஸ்ரீமதி கிறிஸ்ரீன் நீக்கலஸ்.

"சமாதானத்தில் இளைப்பாறுவாராக" 506

## விற்பனைக்கு

யாழ்ப்பாணத்தில் பரிசோதனை செய்யப்பட்ட அவுஸ்திரேலியா, பிரான்சு திராட்சைத் தண்டுகள்விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு, இல: 2, சோமசுந்தரம் அவெனியு, யாழ்ப்பாணம். 507

## கதாப்பிரசங்கம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

நெல்லியடி முருகமூர்த்தி கோயிலில் ஸ்ரீ சி. எஸ். எஸ். மணிபாகவதரால் நடத்தப்பட்டுவரும் சம்பூர்ணராமாயண கதாப்பிரசங்கம் இன்று பூர்த்தியாகும். உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரம் இந்த வைபவத்துக்கு தலைமைதாங்குவார். இரவு 8 மணிக்கு மணிபாகவதருக்கு பொன்னாடை போர்த்திக்கௌரவிக்கப்படும்.

REGAL - JAFFNA
NOW SHOWING
Jane Fonda
in
Sunday in New York
(Metro color)
[ADULTS ONLY]

வெற்றிகாமான 5வது வாரம்!
கிங்ஸ்லி பிளாசா வெம்பிளி ராஜ்
(கொழும்பு) (வெள்ளவத்தை) (கண்டி) (நீர்கொழும்பு)
வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி பிற்பகல் 2-30, 6-30, 9-30
சனி, ஞாயிறு 10-30 பி. ப. 2-30, 6-30, 9-30



★ சிவாஜி கணேசன்
★ எஸ்.எஸ்.ஆர்., நாகேஷ்
★ விஜயகுமாரி
மற்றும் பலர் நடித்த
பச்சை விளக்கு

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு ஜூன் மாதம் 13-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.